[illegible]

V. 6   No 39   5 Oct 1933.

JL
[illegible], N28 KN
N33-6.39
189163

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ௵ அக்டோபர் ௴ 5௳ [No. 39

19 JAN 1934

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 709
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
   T. N. சேஷாசலம் B.A.B.L. 711
3. காற்றுமழை (அங்கம் 5. களம் 1.)
   Shakespeare's Tempest 713
4. தமிழ்ப் பாடம்
   அஷ்டபிரபந்தம்—திருவரங்கத்துமாலை 715
5. அப்பர் (64 கலை-வியாகரணம்-யாப்பியல்)
   E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 717
6. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 10-ம் தசகம்)
   K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 819
7. கலித்தொகை (பாலைக்கலி, 28)
   T. A. கனகசபாபதி முதலியார் 720
8. தத்வஞான மென்றா லென்னை
   T. R. இராஜகோபால் 721
9. வர்த்தமானம் 724


129163

## கலாநிலயம்

### புன்மையின் மேன்மை 2.

**நா**ம் காண்கின்றவைகளுக்கப்பால் யாதொன்றும் இல்லை என்று மறுப்பவரும், ஒன்றிருக்கின்றதாயினும் அதன் தன்மை அறியப்படாமையால் இல்லாததற்கே நேர் என்ற அயர்வினால் புறக்கணிப்பாரும், உளதென்றேனும் இலது என்றேனும் எதனையும் நம்பமாட்டாமல் ஐயப்படுவதே அறிவின் திறம் என்று உரைப்பாரும் ஆகிய முத்திறத்தவர் நிலையினைச் சோதித்தோம். மதங்கள் கூறுகின்ற சித்தாந்தங்களை ஏற்றுக்கொள்ளமாட்டாமையால் நேர்கின்ற மனநிலை வகைகள் இவை. மதவிடயங்களைப் பற்றித் தம் சிந்தனையை ஆராய்ச்சியுள் செலுத்துகின்றவர்களே இத்தகைய பல கொள்கையர்களாய் வேறுபட்டு அதற்கேற்றபடி சொல்பவரும் செய்பவரும் ஆகின்றார். எனினும், மக்கட்டொகுதியில் இன்னவர் மிகமிகச் சிறுகணக்கினர். மற்று மதவிடயமாக ஒன்றும் நினைப்பதின்றியே தத்தம் குலத்தின் இனத்தின் தொன்மைமரபு பற்றியே வாழ்நாட்களைக் கழிப்பவர் மக்களின் கணக்கிறந்த பெரும்பாலோர் ஆகின்றார். எனினும், அம்மிகமிகச்சிறு எண்ணினர் சொல்களும் செயல்களும் எண்ணிறந்தஏனையோர் தம் வழக்கமுறையையும் வாழ்க்கை நிலையையும் தாக்காமற் றீர்வதில்லை. தற்கால மக்களில் பெரும்பாலோர் மத அறிவு சற்றேனும் இல்லாதவர்களாகலாம்; மதசம்பந்தமான 'மகா நாடுகளில்' வற்புறுத்தப்பெறுகின்ற பொருளில் மதப்பற்றும் இல்லாதவர்களாகலாம்; சிற்சிலர், மத உணர்வு அளவுகடந்து இந்தியாவிற் பரந்திருந்ததாற்றான் நாம் உலகநிலையில் இந்நாள் பின்னடைந்து கிடக்கின்றோம் என்று சொல்லினும் சொல்லலாம். எனினும் இன்ன வகைகளைச் சார்ந்த மனிதர் எல்லோர் மனத்திடையேயும், கடவுளும் அக்கடவுளை ஆராதித்தற்குரியவோர் முறையும் தம் வாழ்க்கையிற் கலவாத காரணத்தால் எஞ்சுகின்ற ஓர் குறை, தோன்றித்தோன்றி, அவரது ஆன்ம அவாவினை நினைவுசெய்யாமல் முற்றிலுங் கழிந்துவிடுதல் என்பது அருமை. இந் நன்னினைவிற்கு ஆதாரமாயிருப்பது அவர் குலத்து வழிவழி வந்த மரபு. முன்னிங்குச்சொன்னபடி மதத்தைப்பற்றிய அறிவின்மை அசிரத்தை முதலியவைகள் மக்கள்தம் உள்ளுணர்வில் ஆழ்ந்து ஊன்றியிருக்கின்ற அந்த மரபின் இயக்கத்தை வேரறக் களைந்தொழிக்கமாட்டா. வேறோர் அறிவின் ஆற்றலுக்கே இம் மரபுணர்வினை வலியுறுத்தவோ அல்லது அடியுடன் அழிக்கவோ இயலும். எய்தப்பெறுகின்ற அப்புதிய அறிவு மெய்யறிவாயின் மரபுணர்வு விளக்கமும் திட்பமும் ஊக்கமும் பெற்று மேன்மேல் வளமுறப் பெருகித் தெய்வத்தன்மையடையும். மற்று, அவ்வறிவுதான் மெய்யன்றாயின் மரபுணர்வின் மழுக்கம் விளையத் தலைப்படுகின்றது. "மெய்யன்றாயின்' என்று எதிர்மறை வாசகத்தில் இங்குக் கூறியிருப்பது கருத்தினில் வைக்கத்தகுந்தது. ஏனெனில் அறிவென்று எதிர்வந்து நிற்பது முற்றிலும், நாத்திக வாதங்களைப்போல், பொய்யாகவே இருக்கலாம், அல்லது மெய்யென்று கொள்வதனினும் பொய்யென்று துணிந்துமறுப்பதற்கு வகைதெரிய லருமையாய தன்மையுடையதாக இருக்கலாம். உணர்வினது ஊக்கமானது பொய்யென்று தெரியநிற்கும் அறிவினுடைய முயற்சியைப் பெரும்பாலும் எளிதில் தடுக்கக்கூடியதாக இருக்கின்றது. மற்று, மெய்ம்மையும் இதனில் உண்டுகொல் என்ன

எண்ணும்படி எதிர்வருகின்ற அறிவிற்கே உணர்வின் மரபானது மயங்கி வயமாகின்றதென்னலாம். மெய்யின் இனம்போன்று இனமல்லாமல், மதவிடய மதிமரபினை மயக்கவல்ல கொள்கையை இனிச் சிறிது நோக்குவோம்—

நாம் பிறந்து வளர்ந்து விவகரிக்கின்ற இம்மானுட வாழ்க்கையில் நேரிய சீரிய கருமங்களை நாம் என்றும் செய்துவர ஆயத்தமாயிருப்போமாயின், பின், அந்தரம் நோக்கி அம் முழுமுதல் மெய்ப்பொருளின் தன்மையைப்பற்றி நாம் ஒன்றும் சிந்திக்காமல் விட்டால்தான் என்ன - என்பது இக் கொள்கையின் அடிப்படை. ஆங்கிலத்தில் இக் கொள்கையை ஹ்யூமனிஸம் (Humanism) என்று அழைப்பார். கடவுளைப்பற்றிய கருத்துக்களெல்லாங் கிடக்க, மாநுடத்தை முதன்மையாகவைத்து நினைக்கும் இம்மனத்தினர் உரைகளும் உழைப்பும் மேற்பார்வைக்கு மிகவும் உண்மையும் நன்மையும் சுவையும் பொருந்தியனபோலத் தோன்றும். "உண்மை எது வென்பதேனும் அல்லது உண்மைதான் ஏதேனும் உளதோ வென்பதேனும் நிச்சயமல்ல. எது எவ்வாறாயினும், இவ்வாழ்க்கை ஒன்றுமட்டுமே, நம் கண்களுக்குமுன் காணப்படுவதால், நிச்சயமும் இலக்கண வரம்பிற்கு உட்பட்டதுமாகின்றது; ஆதலின் நாம், நிச்சயமற்ற அக்கடவுள் திறத்தில் நம் கருத்தை வீணே செலுத்தாமல் மாநுட வாழ்க்கை மேன்மையுறவல்ல கருமங்களைக் கைக்கொள்வோம்"—என்னல் இன்னவர்தம் மனநிலையின் சாரமாம். மதக்கோட்பாடுகள் எல்லாம் மறுமை யென்னும் ஒருமாயத்தைப் பின்பற்றுவனவென விலக்கி அதற்கெதிர் இவர், "இம்மைக்கே எங்கள் கருத்தைச் செலுத்தி மாநுடச் செம்மையையே எங்கள் முற்றிய நோக்கமாகக் கொள்கின்றோம்" எனச் சாற்றுவார். இம்மொழியினைக் கேட்டவளவில், இதனினும் சீரியதொன்று வேறெங்கு உளது என, சிந்தனைத்திறம் பெரிதில்லா மாந்தரனைவரும் மிக எளிதில் வியந்து பாராட்டத் தலைப்படுதல் இயல்பே. தற்காலம், கலியுகப் பெருமையின் விருதுக் கொடியே என்ன உயர்த்தியிருக்கும் ஸைக்கோ - அனலிஸிஸ் (Psycho analysis) எனப்படும் நூதன சாத்திரம் கூறுமாப் போல், ஒழுக்கம் ஒப்புரவு ஆசாரம் ஐம்புலனடக்கம் முதலியவைகளை, இக் கொள்கையினர் பொருளற்ற வீண் சொற்களென்று கழித்து மனம் போனபடியெல்லாம் போதலே மாநுட மாண்பும் நன்மையும் ஆகும் என்ன இயம்பமாட்டார். மற்று, மதாசார அநுட்டானங்களாலும் விரதங்கள் பூண்டொழுகும் வாழ்க்கையாலும் புலன்களை முற்றிலும் அடக்கி நசைமெலிந்து கிடத்தலே உயர்ந்ததென்றும் ஒப்புக்கொள்ளார் இவர். இவ்விரண்டு கோடிகளுக்கிடையேயோர் மிதமான நிலையே நேரிதென்றும், அந்நிலையிற்றானே மாநுடச் சிறப்பும் செம்மையும் வாய்க்கும் என்றும் இவர் சாதிப்பார். இந்தப் பேச்சும் பொதுஜனங்களை மிக எளிதில்வயப்படுத்திக்கொள்ள வல்லது. தொன்மை மரபினில் ஊன்றிய மதவுணர்வானது, மனிதர்பால் மிகவும்பரிந்து நட்புப்பாராட்டுவது போல்தோன்றி நிற்கின்ற இக்கொள்கையைக் கடந்து கடவுள்நினைவைப் பற்றுவிடாமல் காத்து உய்வதற்கு ஆராய்ச்சியும் முயற்சியும் அதிகம் வேண்டும். அவ்வாராய்ச்சியினிடையே மரபுணர்விற்குச் சார்பாக எழுந்து உதவவல்ல எண்ணங்கள் சில உள.

நாத்திகர்கள் உரைக்கும்வண்ணம் மனிதன் அத்தனையும் உடல்மாத்திரம் அல்லன்; அல்லது, இம்மானுடச் செம்மையே சாதிக்க நிற்கும் இவர் கருதுவது போல், மனிதன் அத்தனையும் மனம் மாத்திரம் அல்லன். ஆன்மாவும் ஒன்று இருக்கின்றது. அதனுடைய பசியைத் தீர்க்காமற் போனால் மனிதன் ஒருபோதும் வாட்டம் தீர்ந்து அறமும் நன்மையும் இன்பமும் பெற்றவனாகமாட்டான். இந்த ஆன்மப் பசி தாகத்தின் தன்மையை அறிவுணர்த்தி, இம்மையே நம்மதென்றிருக்கும் இவ் வாழ்க்கைக்கெல்லாம் அப்பாலாய வோர் மெய்ம்மையின் நிரந்தர விழைவினை நிறைவேற்றி அவ் வான்மப் பசி தாகங்களைப் போக்கி அறத்தின் திட்பத்தையும் இன்பத்தின் தூய்மையையும் சாதிக்கவல்லது மதம் ஒன்றேயாம். இல்லையேல், மாநுட நன்மையையும் செம்மையையும் மேன்மையையும் இன்பத்தையும் நாடுகின்றவர் எதனைப்பற்றுக்கோடாகக் கொண்டு விவகரிக்கக் கூடியவராவார். கடவுள்நிலை தேர்ந்து தம்மை அக்கடவுளின்சித்தத்திற்கு முதலில் முறைசெய்துகொள்ளாராயின், மாநுடச் செம்மையும் இன்பமும் எங்கிருந்து வரும், அல்லது அச்செம்மையும் இன்பமும் எவ்வகைத்து என்பதுதான் எப்படி ஒருவருக்குத் தெரியும். மனிதனுக்கு எது செம்மை, எது இன்பம், எது நன்மை, என்பதைக் கடவுளைச் சார்ந்தல்லது ஒருவராலும் அறிய இயலாது. இந்த நுட்பத்தை ஐயமற உணர்ந்தவர் உய்வார். இதனைக் கிரேக்கப் பேரறிஞர் ஸாக்ரிடீஸே ஒரு சமயம் மறந்தார் என்றால் அவ்வுண்மையின் ஆழத்தையும் நுட்பத்தையும் அளவிடக் கூடுமோ. இந்திய தத்துவசாஸ்திர நிபுணர் ஒருவர் ஒருமுறை க்ரேக்க வித்தகர் ஸாக்ரிடீஸைச் சந்திக்கநேர்ந்து அவ்விருவரும் அளவளாவியபோது, கிரேக்கவித்தகர் தாம் மானுடவாழ்க்கையின் விடயங்களைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சிகள் பலப் பல செய்துவருவதாகச் சொல்லவும் நம் இந்தியசாத்திரி இளநகை அரும்பி, "கடவுள் விடயமானவைகளை அறிந்துகொள்ளாத எவனும் மனித விஷயமான ஒன்றையும் தெரிந்துகொள்ளல் இயலாதென்பதை அறியீரோ" என எதிர்விளம்பினர் என்று அச்சமயம் அங்கிருந்த அரிஸ்டாக்ஸீனிஸ் என்னும் கிரேக்கர் ஒருவர் எழுதிவைத்திருக்கின்றார். இந்தியர் என்று நாம் எதன்பொருட்டேனும் பெருமை பாராட்டிக்கொள்ளப் புகுவோமாயின், இந்த ஒரு சொல்லின்பொருட்டுப் பாராட்டும் பெருமையும் தற்புகழ்ச்சியுமே பொறுக்கப்படும். கடவுளை அறிந்தபின்னரே மாநுட விடயங்களின் மருமம் விளங்கவரும். அறிந்திருந்த இதனை இன்று இந்தியா மறக்க முயல்கின்றது.

கடவுளைச் சாராத ஒரு நன்மையும் செம்மையும் அறமும் இன்பமும் மனிதருக் கேது. நம்முடைய முன்னேற்றச் சீர்திருத்தகாரர்களெல்லாம் இதனைக் கருதவல்ல கல்வியும் புத்திநுட்பமும்உடையவர்களாயிருப்பாராயின், இந்நாள் நம் சமூகம் மிக விரைவில் நற்கதியடையும். மனிதனுடைய நன்மைசெம்மைகளுக்குப் பாடுபடுவோம் என்பவர், அந் நன்மையும் செம்மையும் எதுவென்று சற்றேனும் செப்ப வல்லவர்களாக இல்லையே. மனிதனுடைய சுவரூபமானது, ஸர் இராதாகிருஷ்ணன் விளம்பும் வண்ணம், உடலாண்மையன்று, செல்வம் செல்வாக்குக்களல்ல, விஷய அறிவுடைய மனமன்று, நுண்ணிய உணர்வுடைய மனச்சாக்ஷியுமன்று. ஸாக்ரிடீஸின் சீடருக்குச் சீடரான அரிஸ்டாடல் என்பவர்,



Be assured that the good of man does not depend upon abundance of possessions, but upon the right inner quality. Not even the body is regarded as in a happy condition, merely because it is decked out in resplendent robes, but only if, though wanting in finery, it is well developed and in good health; likewise one should call only that man fortunate whose soul is ethically developed rather than the man who is rich in outward possessions and is worth nothing in himself. Even a horse is judged by its actual virtues. If it is a poor horse, it is not rated higher because it has a gold bit in its mouth and a costly harness on its back.

எனச் சாற்றுகின்றார். குதிரை நல்ல குதிரை என்று கருதப்படுவதற்கு அதன் குணங்களே ஆதாரமாகவேண்டுமென்றி, அதன் வாயில் தங்கக் கடிவாளம் பூட்டப்பெற்றிருப்பதால் ஒரு குதிரையோ நல்ல குதிரை ஆகிவிடாது. அப்படியே, மனிதனுடைய சுவரூபம் அவனது ஆன்மநிலையினால் விளக்கம் பெறவேண்டும். அஃதில்லாதவரை, மானுட நன்மைக்கு முயல்வதனினும் பேதைமை பிறிதில்லை.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[699-வது பக்கத் தொடர்ச்சி]

விதிவய மென்பதே மதியி னல்வேலல்.

சொல்லிச் சொல்லி னைந்திருக்கின் சில வெள்ளை உண்மைகளின் நினைவினால் ஒருவரைத் தேற்றலாம் என்றெண்ணிய இலக்குவன், தந்தையை இழத்தல் 'சாதாரணம்' என மைந்தனுக்குக் காட்டிய அந்த டென்மார்க் அரசியைப்போல்,தாரத்தை யிழப்பதும் புதுமையன்று என்பதை இராமனுக்கு வடமொழியின் ஆற்றலெல்லாஞ் செலுத்தி எடுத்துக் காட்டினான். எனினும், ஷேக்ஸ்ப்பியரின் உதவி இவ்விராமனுக்கு வாய்க்கவில்லையாதலின், "ஆம், இளையோய், அது சர்வ சாதாரணமே" என எதிர் இயம்பக் கற்கிலாத அவ்வேழையின் செய்தி, "இலக்ஷ்மணர் இவ்வாறு நல்ல தகுதியான இனிய வார்த்தைகளை எடுத்துச்சொல்ல, நன்மையை எப்போதும் கடைப்பிடிப்பவராகிய இராமர் ஒப்புக்கொண்டார்" என்று வான்மீகிமுனிவரால் காட்டும்படி ஆயிற்று. இளையவன் மொழிகளில் நன்மையும் தகுதியும் இனிமையும் இராமன் கண்டானெனின் அவனின் பெருந்தகையாரே உளர்.

கம்பர்தம் நூலில் இராமனுக்குத் தேற்றரவு கூறினோன் தந்தையென்னும் முறையுடைய சடாயு. தனக்குமுன் இலக்குவன் வடமொழியில் இயம்பியுள்ளதை முற்றிலும் புறக்கணித்தானல்லன் இவன். உலகறிந்த உண்மையாயினும் தாம் பட்ட துயரினிடையே யாரும் மறந்தகல்கின்ற செய்தியொன்று உளது. இன்பம் எய்தினோர்,"இவ்வின்பம் நிலைத்திருக்குமோ அல்லது கழிந்துபோய் விடுமோ" என்ற மறுக்கமும் கொண்டு அஞ்சுவதேகடன். மற்று, துன்பம் வந்துற்றபோது, அதுவும் போதற்கே உரியது என்பதை நினையாமல் ஆழ்ந்து அழுங்குவார். இது இன்பத்திற்கும் துன்பத்திற்கும் உள்ள வேற்றுமை. துன்பமுந் தொலையாமற் றீராது என்னும் உண்மை உதிக்குமானால் மனிதரை வருத்தவருகின்ற துயரத்தினது கொடுக்கிலுள்ள விஷத்தின் பெரும்பகுதி வறண்டபடியாகும். ஆதலின், "துன்பந் தணிவீராக, துன்பம் ஒவ்வொருவரையும் வந்துபற்றிக்கொண்டாலும்கணப்பொழுதில் அழிந்துபோம்; இது உலகத்தின் சுபாவம்" என்று இலக்குவன் எடுத்துக் காட்டியது இந்நிலைக்கு மிகவும் ஏற்புடையதொன்று. ஆகையால் சடாயுவும் அதனை ஏற்றுக்கொண்டு,

அந்தரம் வருதலு மனைய தீர்தலுஞ்
சுந்தரத் தோளினிர் தொன்மை நீரவால்
மந்திர விமையவர் குருவின் வாய்மொழி
இந்திர னுற்றன வெண்ண வொண்ணுமோ

[அழகிய தோள்களை உடையவர்களே, ஒருவருக்குத் தீங்குகள்வருவதும்அவை தீர்ந்துவிடுதலும் பழையதோர் இயற்கையாம். மந்திர மறிந்த தேவகுருவான பிரகஸ்பதியின் வாயினின்று வந்த சாபத்தால் இந்திரன் அடைந்த இடுக்கண்களைக் கணக்கிடக் கூடுமோ]

எனச்சாற்றினான். இச்செய்யுளில் வைத்த வேற்றுப்பொருளிற் கிணங்க, இந்திரன் உற்ற இடுக்கண்கள் தீர்ந்து மீண்டும் தன் இன்பத்தை எய்தியதும் இவ்வாசகத்தில் அடங்கி யிருக்கின்றது.

இன்பத்தைப்போன்றே துன்பமும் நீங்குதல் திண்ணம் என்பதுடன், அவை வருங்கால் விலக்கலாற்றாமையாலும் ஒத்திருக்குந் தன்மையையும் அறிந்தவர்க்கும் மறத்த லெளிது. ஆதலின் சடாயு,

அலக்கணு மின்பமு மணுகு நாளிவை
விலக்குவ மென்பது மெய்யிற் றாகுமோ
இலக்குமுப் புரங்களை யெய்த வில்லியார்
தலைக்கலத் திரந்தது தவத்தின் பாலதோ.

[இடுக்கணும் இன்பமும் வருகின்ற காலத்தில் நாம் அவைகளைத் தடுத்துவிடுவோம் என்பது மெய்யாகுமோ, முப்புரங்கள் இலக்காக அம்பு தொடுத்த ஆற்றலுடைய சிவபிரான் மண்டையோட்டில் பிச்சையெடுக்க நேர்ந்தது தவத்தின் ஆற்றலுக்கு உரியதாகுமோ.]

எனக்கேட்டு, துன்பம் வருதலேபோல் தானே நீங்குதலு முண்டு என்பதற்குப் பின்னும் உதாரணங்கள் பகர்வானாகி,

பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால்

[கோபங்கொண்ட கொடிய இராகு என்னும் பாம்பு ஆகாயத்தில் பூத்ததுபோன்ற வெப்பமான கிரணங்களையுடைய சூரியனை ஒருவேளை விழுங்கிப்பிறகு விட்டுவிடும். அழகிய இடமகன்ற பெரிய பூமியை விளங்கச்செய்கின்ற ஆய்ந்த கிரணங்களையுடைய சந்திரனும் ஒரு முறை மாறி மாறி வளர்வதும் தேய்வதும் ஆகும்.]

என்பதையும் எடுத்துக் காட்டுகின்றான். எனின், துன்பம் நீங்குமென்ற நினைவு இவைகளால் நிலைக்கப் பெறும்; இந்நினைவினால் மக்கள் தம் துயர் ஒருவாறு ஆறுதல் இயலும்.

வந்தவாறே துன்பம் போகவும் போகும் என்னும் அந்நினைவின் காற்றுத் துன்பத்தை ஆற்றுமென்றால்,

அதனை மீண்டும் கனற்றுகின்ற நினைவும் வேறொன்று உளது. "நானே யன்றோ இவ்விடுக்கணை விளைவித்துக் கொண்டேன்; மதியுடையேன் ஆயின் அதனை நான் வாராமல் விலக்கியிருக்கலாமே" என்றவோர் சிந்தனை நெஞ்சத்தை அரித்தரித்துத் தின்னலே துன்பத்திற் குயிர் போன்றது. ஜடாயு இதன் பிழையை எடுத்துக் காட்டுகின்றான். நமக்கு ஒன்று வந்து நேர்வது விதியின் செயலென்றும், விதியின் நிகழ்ச்சியை நம்மால் எள்ளளவும் விலக்க இயலாதென்றும், நம் மதியின் பிறழ்ச்சிபோல் தோன்றுவதும் அவ்விதியின் நிகழ்ச்சியே என்றும், நிச்சயமாக நாம் நினைத்தக்கால் பிறகு துன்பத்தின் விஷப்பற்களின் வரிசையெல்லாம் பிடுங்கப்பெற்றதாகும். "அலக்கணும் இன்பமும் அணுகுநாள் இவை விலக்குவம் என்பது மெய்யிற்றுகுமோ" என்றெடுத்தியம்பிய ஜடாயுவின் உட்கருத்துஇதுவே. இதனையே,

தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
எரிவுசெய் தொழியும திழுதை நீரதால்
பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்றலை
அரிவுசெய் விதியினர்க் கரிதுண் டாகுமோ

[விதியினால் வந்ததே என்று தெரிந்துகொள்ள வேண்டியதாகிய ஓர் துன்பம் வந்து நேருமாயின், அதன்பொருட்டுச் சிந்தையைக் கொதிக்கும்படி செய்து முடியும் இது மூடர்கள் தன்மையாம். பாகுபாடு செய்து அனைத்தையும் படைப்பவனாகிய பிரம்மனது தலையை, சிவபிரானைக்கொண்டு, அறுத்துவைத்த விதியினால் முடிக்க இயலாதகாரியம் ஒன்று உளதோ]

என்று செவ்விதின் ஓதினான். துன்பத்திற் கிடமாய நிகழ்ச்சிகள் பல விதியானது நம்மீது தொடுக்கின்றது. அது விதியின் செயலேயன்றி நம்முடைய பிழையன்று. மற்று, அவ்விடர்களை விலக்கரிய விதியின் காரியம் என மதித்து அமையாமல், நம்மனத்தினைக் கொதிகொளக் காண்பது நம் பிழை, என்னும் இக்கருத்து மேற்பார்வைக்குத் தோன்றுமவ்வளவு எளியது மன்று, பழையது மன்று. ஆதலாற்றான்,

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ

[முறைப்படி யாவும் அமையுமன்றிப் புதிய தொன்றை ஒருவரால் அமைக்கக் கூடுமோ! பாராட்டுதற்குரியது ஒன்றுமில்லா இப்பிறவிக்கு இயல்பான இன்பமுந் துன்பமும் விதிப்படியே நடக்கும் என்னும் நினைவை ஏற்றுக் கொள்ளாவிட்டால், நம் மதியின் திறமையால் விதியை வெல்லக்கூடியவர்கள் ஆவோமோ]

என, மூதறிவுடைய அப் புள்ளின்வேந்தன் தன் கட்டுரையைத் துவக்கலாயினான். விதியை மதியால் வெல்ல இயலாதென்பது அன்று இச்செய்யுள் ஈற்றடியின் பொருள்; 'மதிவலியான் விதியை வெல்லவல்லோம்,' என்பதையே வற்புறுத்துகின்றது. ஆயினும், அம்மூதுரை வெறும் வாசகத்தளவு அறையப்பட்டதேயெனின் கம்பர்தம் செய்யுளென்று இதனைக் காணுதல் எங்ஙனம்? கம்பர், மதிவலியான் விதியைவெல்லுதல் என்பதன் வகையையும் உண்மைப்பொருளையும் உரைக்கின்றார். "இன்ப துன்பந்தான் விதிவயம் என்பதை மேற்கொள்க, கொள்வாயாயின் நீ அவ்விதியை உன்னுடைய மதியால் வென்றவனாவாய்" என்னக் காட்டுகின்றார். முன் இவ்விதழ்களில் தலையங்கங்களாக, "வித்தகமோ விதிவசமோ" என்னுந் தலைப்பில் (5-வது வால்யூம்) எழுதப்பெற்றுள்ள 17 கட்டுரைகளும் இவ்வொரு செய்யுளிற்கென்றமைந்த விளக்கமும் விரிவுரையும் போல் நிற்கின்றன. இன்பமும் துன்பமும் விதிவயம்என்பதன் உண்மைப்பொருளும், அதனை மேற்கொள்வதென்பதன் கருத்தும், அதனை மேற்கொண்ட மதி விதியை வெல்வதென்னும் நுட்பமும் அக்கட்டுரைகளில் விளக்கப்பெற்றிருத்தலின் இவ்வயின் மீண்டும் அதிகம் வரையவேண்டா. எனினும், அதனின்று இரண்டொரு பாகங்கள் இங்குப் பெயர்த்தெழுதப் பயன்தரும். இன்பதுன்பங்கள் விதிவயமாவதன் பொருள் அங்கு ஓர் இடத்தில் பின்வருமாறு விளக்கப் பெற்றிருக்கின்றது—

"வித்தகந்தான் எவ்வளவே யாயினும் விதியுடன் எதிர்வழக்கிட்டு வாதாடமாட்டாத விளைவுகள், ஊனிற்கும் மனத்திற்கும் உயிரிற்கும் உள்ளுணர்விற்கும் நிகழ்கின்றனவென்பது நிச்சயம். இதனை மறப்பது மதியன்று. இவ்வுண்மையை எவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆதலால் ஓர்வித்தகன் தனக்கு வந்தெய்துந் துன்பங்களை வாளா ஏற்றுக்கொள்கின்றானே யன்றித் தாளாண்மையற்றுத் தளர்கின்றான் அல்லன். வருத்தத்தை ஏற்றுக்கொள்வதன் பொருள் வேறு, அவ்வருத்தத்தால் வருந்துதல் என்பதன் செய்தி வேறு. துன்பந்தான், தன்முன்னே நின்று கெஞ்சிக் கெஞ்சிப் பணிவோர்தம் கைகளுக்குப் பூட்டுகின்ற விலங்கு ஒன்றும் வித்தகனைப் பிணித்திடாது. "துன்பமே நீ தொலைந்திடுக" என்றென்று ஓயாமல் அதனைவேண்டுவதால் யாதுபயன்! எதிர்வந்து விவகரிக்கின்ற துன்பமே சுயஅதிகாரியன்று. அது வேறோர் வல்லரசின் தூதாகவே நம்பால் வருகின்றது. அவ்வல்லரசன் நம்கண்ணிற்குத் தென்படாமல் சற்றே விலகி நிற்கின்றான், அவ்வளவே. அவ்வலியோன் விதியென்னும் பெயரால் நம் வித்தகத்தினை அவ்வப்பொழுது சோதித்துவருகின்றான். இந்தச் சோதனையை, இன்பத்தையேனுந் துன்பத்தையேனுந் தூதர்களாயனுப்பிப் புரிவது வழக்கம். வித்தகனொருவன் இன்பத்தைத் தன் புறவாழ்க்கைக்கே உரிய செய்தியாய் ஏற்றுக்கொள்வான் என்று முன்னர்க் கூறினோம். துன்பத்தையும் அவ்வாறே ஏற்றுக்கொள்வான் வித்தகன். எனின், இன்பத்தில் இன்புறாதது போலவே துன்பத்திலும் துன்புறாதவன் ஆகின்றான். மற்று, வந்த தூதன் வாளா மீளவே வேண்டியதன்றி வேறுவழியில்லை. அத்துன்பத்தைத் தூதனுப்பிய முதலாளி தோல்வியுற்றவனாகின்றான்.

—5-வது வால்யூம், 362-வது பக்கம்.

இனி, அத்தலையங்கக் கட்டுரைகளின் முடிவில் வரையப்பெற்றிருக்கின்ற சில விடயங்களும், இக்கம்பர் செய்யுளைச் சார்ந்து உட்கொள்ளுதற்குரியன.

மனிதர்தம் இன்பதுன்பங்கள் அவரவர் எய்தும் நிலைகளையும் எய்திய நிகழ்ச்சிகளையும் பொறுத்துள என்னும் இது வாழ்க்கையின் நுனிப்புல்லை நக்கி நிமிர்வார் நவில்கின்ற சொல். வாழ்க்கையின் ஆழத்தில் இருந்து இன்பதுன்பங்களை இயக்குவன அவரவர் கருத்துக்களே. நிகழ்ச்சிகளும் நிலைகளும் விதியினால் இயன்றவைகளாகலாம்; அவைகளை ஏற்றுக்கொள்கின்ற கருத்தினளவே யாகுமாம் அவைகளால் விளைகின்ற இன்பங்களும் துன்பங்களும். எனின், வினையினை ஆள்வது விதியென்றும் கருத்தினையாள்வது வித்தகம் என்றும் ஒருவாறு வகைசெய்து கொள்ளலாம். கொண்டக்கால் மறைபொருள்கள் சில தெளிவடையும்.



செல்வநிலை வறுமைநிலை என்பனவும், நோய்நிலை சுகநிலை என்பனவும், வாழ்க்கை வேறுபாடுகளில் முக்கியமானவை இரண்டு. மானம் உயிர் முதலியவைகளைப்பற்றிய இலாபநஷ்டங்கள் நிகழ்ச்சிகளாகும். மற்றவர் நமக்குச் செய்யும் நன்மையுந் தீமையும் இதனில் அடங்கும். நம்மால் ஆக்குவதற்கும் தடுப்பதற்கும் இயலாமல்ஊழின் வழியே வருவனவும் இருப்பனவும் போவனவும் ஆகிய இந்நிலைகளும் நிகழ்ச்சிகளுமே யல்லாமல்,அவைகளுடன் மனிதர்கள் தம் அறியாமையாற் சார்த்தி நினைக்கும் இன்பங்களுந் துன்பங்களு மல்ல. முன்னிங்கு ஓர் இடத்தில் குறித்தபடி, 'வருந்தியழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின் எனப் போகா" என்பதன் உண்மை, நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையுமே குறிக்கும். அவைகளைக் குறித்தேதான் அவ்வாசகம் கூறப்பெற்றிருக்கின்றதென்பதும் சொற்களி னமைப்பினாலே வெளிப்படையாகின்றது. இன்பதுன்பங்களுக்கு இயைந்த வாக்கியமன்றிது. நிகழ்ச்சிகளும் நிலைமைகளும் நம்முடைய முயற்சியால் முடிக்கப்பெறாதன வாகலாமேயன்றி இன்பதுன்பங்கள் முற்றிலும் வித்தகமதியினர்வசமே இருக்கின்றன என்னுங் கொள்கையே ஊழ்வலியுறுத்தவரும்பெரியோர் உட்கொண்ட உண்மையெனத் துணிதலே நேர். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்" என்னுமத் திருக்குறள் இத்தன்மையைத் தெருட்டியுரைக்கின்றது. "ஆகூழாற்றோன்று மசைவின்மை கைப்பொருள் போகூழாற் றோன்று மடி" என்ற முதற் செய்யுளின்றே "ஊழ்" என்னுமவ் வதிகாரத்தின் உட்கருத்தை ஊகித்துக்கொள்ளலாம். ஆவதும் போவதுமாகிய ஊழ், கைப்பொருள் அடைதலையும் அதனைக் காத்தலையும் இழத்தலையும், இவைகளுக்கு ஏற்றவாறு நிகழ்கின்ற முயற்சிகளையும் பற்றியே ஆராயப்படுகின்றதென்பது அவ்வதிகாரத்திலுள்ள குறட்பாக்களாலும், பரிமேலழகர்உரையினாலும் நன்குவிளங்குகின்றது.செல்வத்தை ஈட்டுதற்கும் துய்த்தற்கும் உரிய ஊழினைமட்டும் இங்கு உரைக்கின்றார். முத்திச் செல்வம் என்று, வித்தகத்தால் எய்தவல்ல நிலைமையையும் 'செல்வம்' என்னுஞ் சொல் குறிக்கும்படி வழக்குளதாதலின்,அதனைவிலக்குதற்கே, 'கைப்பொருள்' என்ற தொடரை வள்ளுவர் முதற்குறளில்அமைத்தார்என்று எண்ண இடமுளது. வித்தக நன்னிலை வாய்த்தலும், அந்நிலையின் நலத்தினால், இன்பதுன்பங்கள் ஊழின் ஆட்சியினின்று அகன்று அவரவர் வயத்ததா யமைவதும் திருவள்ளுவர் அறியாதவைகளல்ல. "இரு வேறு உலகத்தியற்கை, திருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்னுங்குறள், இப்பிரிவினையே எடுத்துப் பேசுகின்றது. "உலகத்தின் இயற்கை வேறு வேறு ஆகிய இரண்டு வகையினில்அமைந்திருக்கின்றது. செல்வத்தில் ஒரு வகையையும், அறிவுடைவர் ஆவதில் ஒருவகையையுங் காணலாம்,' என்பது இக் குறளின் பொருள். இதனில், 'திருவேறு' எனத்தொகையாகவும், "தெள்ளியர் ஆதலும் வேறு" என விரித்தும் உரைத்திருப்பதற்கு முக்கியமான நோக்கம் ஒன்று இருத்தல் வேண்டும். நம்முடைய முயற்சிக்கு அடங்காமல் தானே வருவதும் போவதுமாய் ஊழின்விளைவாக உறுவது செல்வம் என்ற நினைவுதோன்றத் 'திருவேறு' எனக்கூறினார். மெய்யறிவு உடையவர் ஆவது விதியின் சார்பு இன்றியேயும், ஒருகால் விதிக்குமாறாகவும், இயலும் என்பதுணர்த்தத் "தெள்ளியர் ஆதல்" எனச் சிறப்பித் திங்குக் கூறியிருப்பதாகக் கொள்ளல்வேண்டும். இதன்படி நாம் மனத்தைச் செலுத்தி இயற்கை அறிவும்அநுபவமுதிர்ச்சியுங் கொண்டு நோக்குங்கால் "இருவேறுஇயற்கைகளையுடையது இவ்வுலகம். ஒன்று ஊழின் வயத்ததாய்வருகின்ற செல்வம்; மற்றது நம்வயத்ததாகிய மெய்யறிவு"என்னும்வேற்றுமை எழுகின்றது. "இருவேறு"என்பதால் திருவும் தெளிவும் தனித்தனித் தகைமையன என்பதும் ஒன்றற்கொன்று எவ்வகைத் தொடர்பும் பெற்றதில்லை என்பதும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. எனின், இரு வேறு உலகத்தியற்கை,என்றதற்கு"உலகத்து ஊழினான் இயற்கை இரண்டு கூறு"எனப் பரிமேலழகரும், "செல்வமுடையாராதலும் தெள்ளியராதலும் வேறுவேறு ஊழினால் வரும்" என மணக்குடவரும், திருவையும்தெளிவையும் ஊழின் திறத்திலேயே அடக்கிய இவ்வுரைகளின் தகுதியும்பொருத்தமும் அயிர்த்தற்குரியதே."செல்வமும் மெய்யறிவும், வேறுவேறுபோல் தோன்றுமெனினும் ஊழினாலேயே இவை இரண்டும் விளைவனவாதலின் ஒன்றேயாம்," எனத் திருவள்ளுவர் சாதிக்க நினைத்தாரென்ன இவ்விரு வுரைகளும் எழுதப்பெற்றிருக்கின்றன. மற்று, திருவள்ளுவர் கருத்து இதற்கு நேர்மாறாக இருக்கின்றதென்னும் நுண்மையை இத்திருக்குறள் உணர்த்துகின்றதென எண்ணத் துணிகின்றோம். "திருவுடைமை ஒன்று, அது பெருவலி ஊழின் திறம்; மற்று, தெள்ளியராதல் அடியுடன் வேறு, இது முற்றிலும் உன் முயற்சியாலே ஆகவல்லது. ஆதலின் இதனையும் ஊழென்று பிழைத்து நீ மதிமோசம் போகற்க' என்று திருவள்ளுவர் தெரிந்து கூறுகின்றார் என்று யாமிங்குக் கொள்கைக்கு ஆதாரங்கள் உளவோ எனச் சிறிது ஆராய்தல் வேண்டும். எதிர்மறை வகையானும் உடன்பாட்டு வகையானும் ஆதாரங்கள் சில திருக்குறளில் அமைந்திருக்கின்றன என நினைக்கின்றோம்.

இவ்வளவு நுண்ணிய உண்மைகளைத் தன் மொழியினுள்செருகிவைத்துவழங்கினான்சடாயு."உண்மை ஞானிகள் எவ்வகைத் துன்பங்கள் நேரிடினும் அசையார்கள்" என்று இலக்குமணன் வடநூலில் உரைத்தவாசகத்தை நேர்முறை மாற்றி, "உண்மை ஞானிகள் எவ்வகை அசைவு நேரிடினும் துன்பப்படமாட்டார்" என்று காட்டிய இது கம்பரை மெய்யுணர்விலும் பெரியவ ராக்குகின்றது.

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

[704-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5. களம் 1.

இடம்:—ப்ராஸ்ப்பீரோவின் குகைக்கு எதிர்ப்புறம். மந்திர அங்கி அணிந்து ப்ராஸ்ப்பீரோ வருகின்றான். ஏரியலும் உடன் வருகின்றது.

ப்ராஸ்ப்பீரோ:—இப்பொழுது என் கருமம் சிரமுறச் சேர்கின்றது (1). என் மந்திரங்கள் உடையவில்லை (2). என் ஆவிகள் எனக்கு அடங்கி நடக்கின்றன. காலமும் தன் சுமையொடு நிமிர்ந்து செல்கின்றது (3). பொழுது எப்படி இருக்கின்றது?

மந்திரவாதிகள் இந்திரஜாலங்கள் செய்யும்போது அதற்குரிய ஓர் அங்கியை அணிந்து கையில் மந்திரக் கோலும் வைத்திருக்கவேண்டும் என்று கருதுவார்கள். இவைகள் இல்லாவிட்டால் அவர் மந்திரம் செல்லாதாம். இப்பொழுது ப்ராஸ்ப்பீரோ அத்தகைய மந்திர அங்கியை அணிந்து வருகின்றான்.

(1) சிரம் உறச் சேர்கின்றது- தலைமை பெறுகின்றது- என் கருமம் முதிர்ந்து நிறைவேறும் வேளையை அடைந்திருக்கின்றது—என்பது பொருள்.

(2) மந்திரம் பிறழாமல் பலிக்கின்றது என்பது இதன் பொருள்.

ஏரியல்:—ஆறாவது மணியை எட்டுகின்றது. அப்பொழுது, என் தலைவ, நம் வேலை முடியவேண்டும் என்று கூறினாய்.

ப்ராஸ்ப்பீரோ:—இக் காற்றுமழையை நான் முதலில் எழுப்பியபோது நான் அப்படியே கூறினேன். என் ஆவியே, அரசனும் அவனுடன் வந்தவர்களும் எந்நிலையில் இருக்கின்றனர், சொல்?

ஏரியல்:—நீ அவர்களை விட்டுவந்தபோது கட்டளையிட்ட அவ்விதமே ஒருங்கு கட்டுண்டு கிடக்கின்றனர் (4). ஐய, உன் குகையினைக் காக்கின்ற எலுமிச்சைச் சோலையில் எல்லாரும் சிறைப்பட்டுளர். நீ அவிழ்க்கும்வரையில் அவர்களால் ஒரு அங்குலம் நகர இயலாது. அரசனும், அவன் தம்பியும், உன் தம்பியும் இம் மூன்றுபேரும் மதிசிதைந்து மருண்டிருக்க, ஏனையோர் துயரமும் கலக்கமும் நிறைந்து ததும்ப அவர்பால் இரங்கி வருந்துகின்றனர். மற்று, சிறப்பாக, “வயது முதிர்ந்த நல்லோன் கன்ஸாலோ” என்று நீ அழைத்த அவன் கண்ணீர், விழற்கூரைத் தாழ்வாரத்தில் மாரித் துளிகளென்ன, தாடியில் இழிந்தோடுகின்றது (5). இப்பொழுது நீ அவர்களைப் பார்ப்பாயாயின் உன் உணர்வு இளகும்வண்ணம் அத்துணை வலிந்து அவர்பால் உனது மந்திரம் தன் வேலையைச் செய்கின்றது (6).

ப்ராஸ்ப்பீரோ:—அவ்வாறு எண்ணுகின்றாயோ நீ, ஆவியே?

ஏரியல்:—யான் மானிடனாயின், ஐய, என் மனம் இளகும்.

ப்ராஸ்ப்பீரோ:—ஆயின், எனது இளகத்தான் வேண்டும் (7). காற்றேயாகிய உன்னை அவர் துன்பத்தின் உணர்ச்சிதீண்ட, அன்னவர் இனத்தில் ஒருவனாகி அவரேபோல் துன்பத்தின் கூர்மையை அனுபவிப்பதற்கியன்ற நான் நின்னினும் இயற்கையுற இரங்க வேண்டாவோ (8)? அவர் எனக்குச் செய்த மிகப்பெரிய குற்றங்களால் நான் புண்பட்டிருக்கின்றேனாயினும், என் சீற்றத்திற்கு எதிராக நான் எனது பெருந்தகை அறிவினோடுசேர்ந்துகொள்கின்றேன். (9). பழிதீர்த்தலினல்லாது அறத்தினிற்றானே அரிய செய்கை அமைந்திருக்கின்றது. (10). தாம் செய்ததை நினைத்து வருந்துகின்றாராதலின், என் கருமத்தின் போக்கு இனி ஓர் சுளிப்பினளவேனும் நீளாது (11). போய் நீ ஏரியல், அவர்களைச் சிறை நீக்கிவிடு; என் மந்திரத்தை அவிழ்த்துவிட்டு அவர்தம் அறிவினை மீண்டுந்தருவேன்; அவர் இனி, தாமே யாகட்டும் (12).

ஏரியல்:—போய் அழைத்து வருகின்றேன். ஐய,

[ஏரியல் போகின்றது]

ப்ராஸ்ப்பீரோ:—மலையின், ஓடையின், நிற்கும் ஏரியின் ஆவிகாள், உங்கள் அழுந்தாத கால்களால்,

(3) சுமையினால் வளைந்து நடக்கும் ஓர் வயோதிகனாகக் காலத்தை உருவகம்செய்து கூறுவது மேனாட்டோர் வழக்கு. நிகழ்கின்ற நிகழ்ச்சிகளின் துன்பப் பொதியை வருந்திச் சுமக்கவேண்டியதே எப்பொழுதும் காலம் என்னும் வயோதிகனுடைய கதியாம். எனினும், இப்பொழுது காலமானது தன் சுமையினால் அழுந்தாமல் நிமிர்ந்து நடக்கின்றது என்கின்றான் ப்ராஸ்ப்பீரோ. நிமிர்ந்து நடப்பதால் அந்தச் சுமையானது காலத்தை அழுத்தவில்லை என்பது தெரிகின்றது. சுமை எவ்வளவேனும் அது துன்பச்சுமையாயிருந்தால் மட்டுமே அழுத்துமேயொழிய இன்பச்சுமையாய் இருந்தால் அழுத்தாது. ஆகையால் இப்போது தனக்குக் காலமானது சுமந்துகொண்டு வருகின்ற சுமையானது இன்பச் சுமையே—என்பது இதன்பொருள். அதாவது, “இக் காலம் நான் நினைத்ததெல்லாம் இனிது நிறைவேறி, எல்லாம் எனக்கு இன்பமாகவே நேர்கின்றது—என்பது கருத்து.

(4) மந்திரத்தால் எல்லோரும் மனமருண்டு செயலற்றுக் கிடக்கின்றனர்—என்பது பொருள்.

(5) விழலால் வேய்ந்த கூரையின் தாழ்வாரத்தில் மழைநீர் விழுவதுபோல், கன்ஸாலோ வடிக்கின்ற கண்ணீர் அவன் தாடிவழியாக வழிந்தோடுகின்றது—என்பது பொருள்.

(6) உன் மந்திரத்தால் கட்டுண்டு கிடக்கும் அவர்நிலையை இப்பொழுது நீ பார்ப்பாயானால் நின்மனம் இளகும் என்பது நிச்சயம்—என்பது பொருள்.

(7) “இப்பொழுது நீ அவர் இருக்கின்ற நிலையைக் கண்டால் உன் மனம் இளகும்” என்றது ஏரியல். அதற்கு, ப்ராஸ்ப்பீரோ, “எனக்கு இத்தனைக் கொடுமைகள் செய்த அவர்கள் படும் கஷ்டத்தைக் கண்டு என் மனம் இளகும் என்று நினைக்கின்றாயா நீ” என்று கேட்கின்றான். அதற்கு, ஏரியல், “உனக்கு இளகுமோ இளகாதோ, எவ்வாறேனும் ஆகட்டும்; நான் மனிதனல்லன், ஓர் ஆவியே, ஆகையால் மனிதரது மனநிகழ்ச்சியைப்பற்றி என்னால் பேச இயலாது; எனினும் ஒன்று கூறுவேன், நான் மனிதனாக இருப்பேனாயின் நிச்சயம் என் மனம் இளகும்” என்று பதில் கூறுகின்றது. அதற்கு, ப்ராஸ்ப்பீரோ, “உன் மனமே இளகும் என்றால் மனிதனாகிய என்மனம் இளகத்தான் வேண்டும்” என்கின்றான்.

(8) காற்றாகியும் மனித இனத்தைச் சேராததாகியும் இருக்கின்ற உன்னையே, அலோன்ஸோ முதலியோர் படுகின்ற துயரம் இப்படி மனமிரங்கச் செய்யுமானால், அவரேபோல் மனிதனாகிச் சுகதுக்கங்களை அனுபவிக்கின்றவனாகிய நான், இனத்தின் இயற்கைக்கிணங்க இரங்காமல் இருப்பது அடுக்குமா—என்பது பொருள்.

(9) அவர் எனக்குச் செய்த கொடுமைகளை நினைக்கக் கோபம் ஒரு பக்கம் வருகின்றது, மறுபக்கம் என் பெருந்தன்மையுடைய அறிவோ அவர்களைப் பொறுத்துவிடும்படி சொல்கின்றது. இவ்வண்ணம் கோபமும் அறிவும் போராட நான் அறிவையே சார்ந்துநின்று கோபத்தை வென்று, பொறுமையே தலையெடுக்கும்படி செய்வேன்—என்பது பொருள்.

(10) பழிவாங்குவது எளியது, பொறுத்துக்கொள்ளலே அரியது—என்பது, கருத்து. அறம் என்பது பிறர்செய்த தீமையைப் பொறுத்துக்கொள்கின்ற அறத்தினையே இவ்விடத்தில் குறித்து நிற்கின்றது.

(11) அவர் எனக்குத் தீங்குகள் இழைத்ததை நினைத்து மனம்வருந்தி இனி அன்னவை செய்யாமல் திருந்த வேண்டும் என்பதொன்றே என் நோக்கமன்றி, பழியைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதன்று. இப்பொழுது அவர் தாம் செய்த கொடுமையை நினைத்து வருந்துகின்றனர்; ஆகையால் இனி நான் அவர்களைப் பார்த்து முகங்கூடச் சுளிக்கமாட்டேன்—என்பது பொருள்.

(12) தாமேயாகட்டும்—இதுகாறும் தம் அறிவிழந்திருந்தவர் இனித் தம் உணர்வுபெற்றுப் பழைய நிலையை அடையட்டும்—என்பது பொருள்.

(13) ப்ராஸ்ப்பீரோ தன் மந்திரத்தை நடத்துவதற்கு உதவியாயிருந்து ஏவல் ஆவிகளைக் கூவிச் சில சொல்கின்றான். அவைகளிற் சில மலையிலும் ஓடையிலும் ஏரியிலும் வசிப்பன; அவைகளைக் கூப்பிடுகின்றான். மற்றுஞ் சில, கடற்கரையில் வசிப்பன, இவை கடலைத் துரத்துவதும் அக்கடல் மீண்டும் இவைகளைத் துரத்துவதுமாய் விளையாடிக்கொண்டிருக்குமாம். ஆவிகளாதலால் காலடிச்



பெருகிவரும் கடலினை மணல்மீது துரத்தி அது தான் திரும்பிவருங்கால் ஓடுவீர்; ஆடுகள் கறிக்காத கைக்கின்ற பச்சை வளையங்களை நிலவொளியிற் செய்யும் பாதிப் பதுமையீர்; இரவுமணி ஒலிக்கக் கேட்டுக் களிகூர்ந்து நள்ளிரவினில் நாய்க்குடை செய்து விளையாடுவீர் (13). மிக நொய்ய எசமானர்களே நீங்கள் ஆயினும், உந்தம் உதவியைக்கொண்டு யான், நண்பகற் கதிரோனை மங்கச்செய்துளேன்; இகலுடைய காற்றினை வெளிக்கிளப்பி, பச்சைக் கடலிற்கும் நீலநிறக் ககனத்திற்கும் இடையே முழங்கும் போர்கள் மூட்டியுள்ளேன்; நடுநடுங்கக் கிடுகிடுக்கும் இடியினுக்கு நெருப்பூட்டி, ஜோவின் பருத்த அரசமரத்தை அவன் படைகொண்டே பிளந்துள்ளேன்; அடிவலுத்த மலைகளை யான் அசைத்துள்ளேன்; பனையையும் தேக்கையும் யான் வேருடன் பறித்துள்ளேன்; ஆற்றல் மிகுந்த என் மந்திரக் கலையினால், என் கட்டளைப்படி கல்லறைகள் திறந்து தம்முள் துயின்றோரை எழுப்பி வெளியே செலுத்தியுள (14). எனினும், முரடான இம்மந்திரத்தை நானிப்பொழுது துறந்துவிடுகின்றேன். இந்த மந்திரம் செலுத்தப்பட்டிருப்பவர் அறிவினில் என் கருத்தைப் புகுத்துதற்குத் திப்பிய இன்னிசை சிறிது யான் வேண்டியபின்—இப்பொழுதே வேண்டும் அது, (15)—என் கோலினை உடைத்து மண்ணினில் ஆழப் புதைத்து, விழுதுகள் என்றும் அளந்துள்ள ஆழத்திற்கும் அடியில் என் புத்தகத்தை அமிழ்த்திவிடுவேன் (16).

[இன்னிசை கேட்கின்றது]

---

**குறிப்பு:**—இந்திர ஜாலம்போல், தன் கற்பனையால் இதுகாறும் தான் நிகழ்த்திய நாடகக்கலையை இனிக் கையாளப்போவதில்லை என்று ஷேக்ஸ்ப்பியரே, ப்ராஸ்ப்பீரோவின் மூலமாக இங்குத் தெரிவிக்கின்றார் என்று கருதுவாரும் உளர். இந்தக் ‘காற்று மழையே’ ஷேக்ஸ்ப்பியர் எழுதிய நாடகங்களில் கடைசி யென்று பெரும்பாலும் மதிக்கப்படுகின்றது.

சுவடு மணலிற் படியாமைபற்றி, ‘அழுந்தாத கால்கள்’ என்கின்றான். இன்னும் சில புற்றரைப் பரப்பில் வசிப்பன. அவை நிலவொளியில் கைகோத்துக் கூத்தாடுமிடங்களில் புல்லானது செழித்தோங்கிப் பசுமையாக விளையுமாம். இவ்விடங்கள் ‘பச்சை வளையம்’ என்று கூறப்படும். ஆயினும் அப்புல் கைக்கும் என்றும் ஆடுகள் அவைகளைத் தின்னாவென்றும் கூறுவர். இன்னவகை ஆவிகளைப் “பாதிப் பதுமையீர்” என்று அழைக்கின்றான். ஏனெனில் பொம்மலாட்டப் பதுமைகளைப் போல் இவைகளுக்கு ஆட்டம் மாத்திரம் இருக்க உருவம் இல்லாமையால், பாதிப்பதுமை எனக் கூறப்பட்டன. இனி, பட்டினங்களில்வசிக்கும் ஆவிகளை அழைக்கின்றான். அக்காலத்தில், ஊர் நடமாட்டங்கள் அடங்கவேண்டும் என்பதற்கு அடையாளமாக இரவு எட்டுமணிக்கு, மணியடிப்பார்கள். இதற்கு இரவுமணி என்று பெயர். இந்த இரவுமணி யடித்த பிறகுதான் ஆவிகள் தத்தம் இடத்தைவிட்டு வெளிப்புறப்படலாமாம். (பிறகு யாமக்கோழியின் முதற்குரல் கேட்டதும் இவைதிரும்பித் தம்மிடஞ் சேர்ந்துவிடவேண்டும்.) இரவுமணி யடித்ததும் தாம் வெளிச்சென்று விளையாடலாமாதலின் அம்மணிகேட்க இவை களிக்கின்றன. நள்ளிரவில் நாய்க்குடைகள் செய்வதே இவைகளின் முக்கிய விளையாட்டாம். முதல்நாள் மாலையில் இல்லாமல் மறுநாட்காலைக்குள் முளைத்திருப்பதால், நாய்க்குடைகள் ஆவிகளால் நள்ளிரவில் விளையாட்டாகச் செய்யப்படுகின்றன என்று கருதப்படும்—இந்நால்வகை ஆவிகளை அழைத்து ப்ராஸ்ப்பீரோ இனி, சில சொல்கிறான்.

(14) வலியில்லா ஆவிகளின் உதவிகொண்டு தன் மந்திரத்தால் சாதித்திருப்பவைகளை ப்ராஸ்ப்பீரோ சொல்லிக் காட்டுகின்றான். அவை முறையே, சூரியனை மறைத்தல், காற்றைக் கிளப்பல், கடலைப் பொங்கவைத்தல், இடியை வீழ்த்தல், மலையை அசைத்தல், மரங்களைப் பறித்தல், கல்லறைகளைத் திறந்து இறந்தவர்களை நடமாடவைத்தல்.

ஜோவ், என்பது உரோமர்களின் முதற் கடவுள். இக்கடவுளுக்கு ஆயுதம் இடி. அக்கடவுளால் மிகவும் விரும்பப்படுகின்ற மரம் அரசமரம். அந்த இடியைக் கொண்டே அம்மரத்தையே பிளக்கும்படி செய்யவல்ல ஆற்றலுடையேன் யான் - என்கின்றான்.

(15) இவர்கள் அறிவை என் வயப்படுத்தும்பொருட்டுச் சிறிது நீங்கள் எனக்கு உதவியாக இசை பாடவேண்டும்; அதற்கப்புறம் உங்கள் உதவியும் வேண்டா, என் மந்திர வித்தையையும் அடியுடன் விட்டுவிடுவேன்-என்பது பொருள்.

(16) கோல் - மந்திரக் கோல். புத்தகம் - இந்திரஜாலவித்தையைப் போதிக்கும் புத்தகம். விழுது - கடலின் ஆழத்தை அளக்கும் கருவி. கோலை உடைத்தெறிந்து புத்தகத்தைக் கடலில் வீசி எறிந்து இனிநான் என் மந்திரஜாலப் பயிற்சியை அடியுடன் விட்டுவிடுவேன் என்கின்றான்.

# தமிழ்ப்பாடம் 89.

## அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை

[696-வது பக்கத் தொடர்ச்சி]

ஓங்கார வட்டத்து மாசுணப் பாயி
லுலோகமுண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்ட தாலெப்
பொழுதுமென்னை
நீங்கா திடர்செய்யும் தீவினைகாளினி
நின்றுநின்று
தேங்காது நீருமக் கானிடத் தேசென்று
சேர்மின்களே. 14.

பதப்பிரிவு:-ஓம்காரம் வட்டத்து மாசுணம் பாயில் உலோகம் உண்ட பூ கார் விழிக்கு புலப்பட்டது ஆல் எ பொழுதும் என்னை நீங்காது இடர் செய்யும் தீ வினைகாள் இனி நின்று நின்று தேங்காது நீரும் அ கான் இடத்தே சென்று சேர்மின்கள் ஏ.

பதவுரை.

ஓங்காரம் - பிரணவ வடிவமான, வட்டத்து-விமானத்துள், மாசுணம் - ஆதிசேடனாகிய, பாயில்-படுக்கையின்மேல், உலகம் - உலகங்களை, உண்ட-உண்ட, பூ - அழகிய, கார் - கருமேகம் போன்ற திருமால், விழிக்கு - என்னுடைய கண்களுக்கு, புலப்பட்டது-தெரிவதாயிற்று, (ஆகையால்)

எப்பொழுதும் - எப்பொழுதும், என்னை-என்னைவிட்டு, நீங்காது - அகலாமல், இடர்செய்யும் - துன்பத்தைச் செய்கின்ற, தீவினைகாள் - என் கொடிய வினைகளே, இனி - இனிமேல், நின்று நின்று - என்னுடன் இருந்து இருந்து, தேங்காது - தேங்கிக்கிடக்காமல், நீரும் - நீங்களெல்லாரும், அ - அந்த, கான்

இடத்தே - காட்டிற்கு, சென்று - போய், சேர்மின் கள் - சேருங்கள்.

விரிவுரை:—கார், என்பது இங்கு உவமை ஆகு பெயராய்த் திருமாலைக் குறிக்கின்றது. "உலகமுண்ட அப்பெருமானையே நான், திருவரங்கத்தில் பாம்பணையில் இங்குப் படுத்திருக்கக் கண்டுவிட்டேன். இனித் தீவினைகள் என்னோடு தொடர்பற்று ஓடிவிடவேண்டும்" என்று துணிந்த கவி அத்தீவினைகளைக் கூப்பிட்டு "ஏ தீவினைகளே, நீங்கள் இதுகாறும் என்னைவிட்டுப் போகாமல் கும்பல் கூடிக்கூடி எனக்குத் துன்பம் விளைத்துவந்தீர். இனி உம் காசு என்பால் செல்லாது. ஆகையால், செல்வாக்கு இழந்தவர்கள் காட்டிற்குப் போய்விடுவதேபோல் நீங்களும் காட்டிற்குப்போய்ச் சேர்ந்துவிடுங்கள்" என்று துரத்திவிடுகின்றார்.

---

வலைப்பால் விடம்பிணைக் கண்ணியர் போகத்தின்
        மாலுறுமென்
தலைப்பாற் கழலரு டாரரங் காபல
        தாயர்தந்த
முலைப்பாற் கடலுன் றிருக்கழ லாணிவெண்
        முத்தெறியு
மலைப்பாற் கடலி னளவா மெனின்மற்
        றதுவுமன்றே. 15.

பதப்பிரிவு:—வலை பால் விடம் பிணை கண்ணியர் போகத்தில் மால் உறும் என் தலைப்பால் கழல் அருள் தார் அரங்கா பல தாயர் தந்த முலை பால் கடல் உன் திரு கழல் ஆணி வெள் முத்து எறியும் அலை பால் கடலின் அளவு ஆம் எனின் மற்று அதுவும் அன்றே.

பதவுரை.

தார் - துளவமாலை யணிந்த, அரங்கா - திருவரங்க நாதனே, (எனக்குச் சன்மந்தோறும்) பல - பற்பல, தாயர் - தாய்மார்கள், தந்த - கொடுத்த, முலைப்பால்- முலைப்பாலை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து அதன் அளவைக் கருதுவேனாயின், கடல்-அந்த முலைப்பால் கடலானது, உன்-சயனம்செய்யும் உனது, திரு-அழகிய, கழல் - பாதங்களில், ஆணி - சிறந்த, வெள் - வெண்மையான, முத்து - முத்துக்களை, எறியும்-வீசுகின்ற, அலை-அலைகளையுடைய, பால்கடலின் - பால் கடலினது, அளவு - அளவு, ஆம் எனின் - ஆகுமோ என்றால், மற்று - மற்று, அதுவும்-அப்பாற்கடலும், அன்றே-ஆகாதே; (இப்படித் தொடர்ந்துவரும் பிறவியினின்று நீங்க என்செயலால் ஆவது இனி யாதொன்றுமில்லை; ஆகையால்)

வலை - ஆடவர்களைக் கவர்வதால் வலைபோலும், பால் - இனிய நோக்கு இருப்பதால் அமிர்தம்போலவும், விடம்-ஆடவர்களை வருத்துவதால் விஷம்போலவும், பிணை - மருண்டபார்வையால் பெண்மான் கண் போன்றும் இருக்கின்ற, கண்ணியர்-கண்களைஉடைய மாதர்களது, போகத்தில் - சிற்றின்பத்தில், மால் உறும் - மயங்கிக்கிடக்கும், என் - என்னுடைய, தலைப்பால் - தலையில், கழல் - உன்னுடைய பாதங்களை, அருள் - வைத்தருள்வாய்.

விரிவுரை:—எண்ணில் பல்கோடி ஜன்மங்கள் தான் எடுத்திருப்பதை நினைத்துக்கொள்கின்றார் கவி. அந்த அந்தச் சன்மத்தில் அந்தவந்தத் தாயானவள் தனக்குக்கொடுத்திருக்கக்கூடிய பாலையெல்லாம் ஒன்றாய்த் திரட்டித் தன் மனக்கண்ணால் பார்க்கும்போது அவ் வெள்ளம், நெடுமால் பள்ளிகொள்ளும் திருப்பாற் கடலினும் பெரியதாய்க் கவிக்குத் தோன்றுகின்றது. இவ்வாறு ஈறிலாமல் இறந்தும் பிறந்தும் படுகின்ற தொல்லையினின்று தன்னை நீக்கி முத்தி தந்திடுமாறு தன் தலைமேல் பாதங்களை வைத்து அருளக் கடவுளை வேண்டுகின்றார்.

---

கரணந் தவிர்ந்து விழிபோய்ச் சுழன்று
        கலங்குமென்றன்
மரணந் தனில்வந் துதவுகண் டாய்கொற்ற
        வாளியொன்றால்
அரணங் கடந்தவன் காணு வரங்கவென்
        னருயிர்க்குன்
சரணஞ் சரண மொழிந்தில்லை வேறித்
        தராதலத்தே. 16.

பதப்பிரிவு:-கரணம் தவிர்ந்து விழிபோய் சுழன்று கலங்கும் என்தன் மரணம்தனில் வந்து உதவு கண்டாய் கொற்றம் வாளி ஒன்றால் அரணம் கடந்தவன் காணு அரங்க என் ஆர் உயிர்க்கு உன் சரணம் சரணம் ஒழிந்து இல்லை வேறு இ தராதலத்து ஏ.

பதவுரை.

கொற்றம் - வெற்றிபொருந்திய, வாளி ஒன்றால் - ஓர் அம்பினால், அரணம் - மூன்று மதில்களை, கடந்தவன்-வென்றவனாகிய சிவபிரானும், காணு - காணாத, அரங்க - திருவரங்கநாதனே,

என் - என்னுடைய, ஆர் - அருமையான, உயிர்க்கு - உயிரிற்கு, உன் - உனது, சரணம் ஒழிந்து - திருவடிகள் தவிர, சரணம் - அடைக்கலம், வேறு - வேறு, இல்லை - இல்லை, (ஆகையால்)

கரணம் - ஐம்பொறி முதலியன, தவிர்ந்து - தம் செயலை ஒழிந்து, விழி - பார்வை, போய் - மங்கிப் போய், சுழன்று - சுழல்வதாகி, கலங்கும் - கலங்குகின்ற, என்தன் - என்னுடைய, மரணந்தனில்-மரண காலத்தில், வந்து - நீ வந்து, உதவுகண்டாய் - உதவி செய்து அருள்வாயாக.

விரிவுரை:—எத்தகையினோரும் தம்முடைய அந்தியகாலத்தில் திருவரங்கனை நினைத்தழைத்து அவன் பாதங்களில் அடைக்கலம் புகுவாராயின் அவர் வினை நீங்கி முத்திபெறுவர். எனினும் இருந்த நாளெல்லாம் அவன்பால் கருத்தில்லாராய் விவகரித்தவர்க்கு மரணகாலத்தில் அரங்கனை அழைக்கவேண்டுமெனும் மனம்வராது; உலகவாதனைகளே அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். சிலமுடையவர்க்கே அந்தியநேரத்தில் எமன்வந் திழுக்கும்போது திருவரங்கப்பெருமானை மனத்தால் நினைக்கவும் வாயால் அழைக்கவுங் கூடும். சீலம் மிகுந்தவராயினும் பிள்ளைபெருமாள் ஐயங்கார் அந்தியத்தில் அரங்கனை நினைக்கும் தகுதி தனக்கு உண்டோ இல்லையோ என்னும் சங்கையுடையாராகி, 'முன்சாக்கிரதையாக' அப்போதைக்கு இப்போதே சொல்லிவைப்பவ ராகின்றார்.

"துப்புடையாரை யடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே, ஒப்பிலே னாகிலு நின்னடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால், எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கேது நானுன்னை நினைக்கமாட்டேன், அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத் தரவணைப் பள்ளியானே" என்ற பாசுரத்தின் கருத்தை இச்செய்யுள் உட்கொண்டுளது.



## இலக்கணம்

உயிரீற்றுச் சொல், உயிர்முதல் சொல், என்னும் தன்மையை உணர்த்தினோம். நிலைமொழி யிறுதியிலுள்ள உயிர், வருமொழி முதலிலுள்ள உயிரோடு எவ்வாறு புணரும் என்பதை அறிய நாம், அவ்விரு மொழிகளும் என்னதொடர் ஆகின்றன என்பதையேனும், வருமொழிமுதல் இருக்கும் உயிர் பன்னிரண்டு உயிரெழுத்துக்களில் எந்த எழுத்து என்பதையேனும் கருதவேண்டியதில்லை என்றும் பொதுவாகக் கூறினோம். இவைகளை நினைவில் வைத்துக் கொண்டு புணர்ச்சிவிதிகளைப் பார்ப்போம்.

I. நிலைமொழி யிறுதியில் இ ஈ ஐ என்ற மூன்று உயிர்களில் எதுவேனும் ஒன்று இருந்து, வருமொழி முதல் உயிர், அ முதல் ஔ வரையிலுள்ள பன்னிரண்டில் எதுவாயிருப்பினும், இவ்விரு உயிர்களும் புணரும்போது இடையில் ய் என்னும் மெய்யெழுத்து வரும். வந்த அந்த ய் என்னும் மெய்யெழுத்தின் மேல் (வால்யூம் 6, 592, 600 பக்கங்களில் சொல்லிய விதிகளின்படி) வருமொழி முதலிலுள்ள உயிர் ஏறிவிடும். உதாரணம்:—

கிளி + அழகு = கிளியழகு— இதனில் கிளி என்னும் நிலைமொழியின் இறுதியில் ஒலிக்கின்ற உயிர் இ, வருமொழி முதலில் உள்ள உயிர் அ, இவை இரண்டும் புணரும்போது கிளி ய் அழகு என ய் என்னும் மெய் வர, அந்த ய் என்னும் மெய்யின்மேல் வருமொழி முதலிலுள்ள அ என்னும் உயிரேறி, ய என ஆயிற்று. ஆகவே, கிளியழகு, என வரும். இப்படியே, நிலைமொழி யிறுதியில் இ என்னும் உயிரிருக்க, வருமொழிமுதலில் எந்த உயிர் வந்தாலும் ய் என்னும் மெய்யெழுத்தே இடையில் இவைகளைச் சேர்த்து வைக்கும்பொருட்டு வரும்:—

மணி + ஆட்டம் = மணியாட்டம். பகழி + இட்டான் = பகழியிட்டான். குருவி + ஈட்டம் = குருவியீட்டம். இரவி + உதித்தது = இரவியுதித்தது. சொல்லி + ஊடினாள் = சொல்லியூடினாள். கரடி + எழுந்தது = கரடி யெழுந்தது. மதி + ஏது = மதியேது. மணி + ஒலி = மணியொலி. நதி + ஓடியது = நதியோடியது. கல்வி + ஔவியம் = கல்வியௌவியம்.

இப்படியே, ஈ என்னும் உயிரின் முன்னும் ஐ என்னும் உயிரின் முன்னும், வருமொழிமுதலில் அ முதல் ஔ ஈறாக பன்னிரண்டு உயிர்களில் எது வரினும் ய் என்னும் மெய்யெழுத்துத்தோன்றி அதன்மேல் வருமொழி முதல் உயிர் ஏறுவதாகும்:—

தீ + அவிந்தது = தீயவிந்தது. நீ + ஏகு = நீயேகு. ஈ ஓடும் = ஈயோடும், முதலியன.

மனை + எய்தினான் = மனையெய்தினான். பொன்னை உருக்கினான் = பொன்னையுருக்கினான். கருணை + இல்லை = கருணையில்லை. வேதங்களை + ஓதினான் = வேதங்களையோதினான். அவளை + ஓ = அவளையோ— முதலியன.

II நிலைமொழி இறுதியில் அ ஆ ஊ ஒ ஓ ஔ, என்னும் உயிர்களில் ஏதாகிலும் ஒன்று இருக்க, வருமொழி முதலில், அ முதல் ஔ ஈறாகப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களில் எது இருப்பினும் இவ்விரண்டு உயிர்களும் புணரும்போது, வ் என்னும் மெய்யெழுத்து இடையே வரும். வந்த அந்த வ் என்னும் மெய்யெழுத்தின்மேல் வருமொழிமுதலிலுள்ள உயிர் ஏறி அதனை உயிர்மெய்யாக்கிவிடும்:—

கண்ட + அரசன் = கண்ட வ் அரசன் = கண்டவரசன். குறையா + ஆசை = குறையாவாசை. பூ + அலர்ந்தது + பூவலர்ந்தது. ஒ + ஒரு = ஒவ்வொரு. ஓ + என்று = ஓவென்று — முதலியன இவ்விதிக்கு உதாரணங்களாகும்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்— 30. வியாகரணம்

[705-வது பக்கத் தொடர்ச்சி]

### VI. விதிவிலக்குறு விருத்தங்கள்

### (Irregular metre)

மேற்கூறிய விருத்த இலக்கணமுறை பிறழ்ந்த செய்யுள்கள் நமது தமிழிலக்கியத்தில் சில காணப்படுகின்றன. அன்னபடி நமது சமய குரவர்கள் போன்றவர் பாடினால் அவைகளை ஒழுங்கீனமெனக் கூற நம்மா லாகாததாம். ஆயினும் அச்செய்யுள்கள்போல் நாம் தற்காலத்தில் செய்யுளெழுதப் புகுவது முறையன்று. ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும், இசையிலும் கலையிலும் வயப்பட்ட (Shelley) ஷெல்லி என்னும் கவிவாணர் முறைகேடான யாப்பில் செய்யுள்கள் பாடினாராயினும், அவரைப் பார்த்து (புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டுக் கொண்டதென்னும் பழமொழி போல்) நாம் அவ்வகைச் செய்யுள்கள் பாடலாகா தென்பது மாணவர் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாம். ஆயினும் நம் இலக்கியத்தில் நாம் இத்தகைய விதிவிலக்குறு விருத்தங்களைக் காணுமிடத்து, இவையிவை இவ்வகை விருத்தங்களின் மாற்றுருவென அறிவதற்குச் சில உதாரணங்களைக் காண்போம்:—

(1) அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தத்தில் 3வது வகையாகிய "முதனான்கும் காயாகி, பின்னவை மா தேமாவாய்" வரும் முறையில் மாறுபாடு.—

பால்வெண் மதிசூடிப் பாகத்தோர்
        பெண்கலந்து பாடி யாடிக்
கால னுடல்கிழியக் காய்ந்தா
        ரிடம்போலும் கல்சூழ் வெற்பி
னீல மலர்க்குவளை கண்டிறக்க
        வண்காற்று நெடுந்தண் சாரற்
கோல மடமஞ்ஞை பேடையொ
        டாட்டயரும் குறும்ப லாவே.

சம்பந்தர்-திருக்குறும்பலா - பண் -காந்தாரம் 4.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தத்தில் 6-வது * வகையின் மாறுபாடாகச்சற்று வெண்டளைபிறழ்ந்து வருவது:—

---

* கடையது மாவிள மாச்சீர்
        கலந்தது வெண்டளை யென்ப
துடையது பாதி யிரண்டு
        மோவிய பொற்கொடிப் பாவாய்

மாத்தாண் மதமா னெருத்தின்
மடங்க லெனச்சேல் வாரும்
பூத்தா ரொலிவாம் பரிமேற்
புகர்மா வெனப்போ வாரும்
பார்த்தார் பரிதி யெனவாம்
பரித்தே ருகைத்தூர் வாரும்
தேத்தா ருளர்வண் டலம்பச்
சிலம்பி னடக்கின் ருரும்.

திருவிளையாடற் புராணம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தத்தின் ஏழாம் வகையாகிய "மாச்சீ ரைந்து காயதொன்று" என்னும் விதிக்கு விலக்காய் அடிமுழுவதும் மாச்சீரே வருவது:-

கருப்புச் சிலைக்கு நாணு வெம்மைக்
கைக்கொண் டருள்கென்
ஞெருப்பட் டண்மி மொய்த்த ஹுறழப்
பொதும்பர் வண்டு
குருப்பொன் மகரப் பகுவா யொளிருங்
கூந்தன் கொழுந்தேன்
மருப்பட் டலருந் தொடையன் மருங்கு
வந்து சூழ.

வைய முழுது மடிய வருமோ ரூழி முடிவின்
வெய்ய விருள்வந் தடர விருநீர்ச் சலதி வேகஞ்
செய்து நிமிர்ந்து பொங்கித் தேங்கிக் கிடந்த காலை
பைய வுறக்க நீத்து மீளப் படைக்க வுன்னி.

காஞ்சி புராணம்.

எழுசீர் விருத்தத்தில் முதற்சீர் குறைந்துவரும் அறுசீர் விருத்தம் மற்றொருவகையாம்:—

ஆனி னைந்துட னவே றமுதமும் சிலர்சிலர் தம்மின்
தேன ளாந்திரு வமுது முதலிய சிலர்சிலர் தம்மின்
வான ளாவிய கோயின் மாளிகை யெங்கணு மணிகள்
கான ளாமலர் பட்டிற் கவிநலம் சிலர்சிலர் புனைமின்

ஏழாம்வகை யறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம் ("மாச்சீரைந்து காயதொன்று") சில விகர்ப்பத்துடன் வருவது.

தோற்ற முண்டேல் மரண முண்டாம்
துயர மனைவாழ்க்கை
மாற்ற முண்டேல் வஞ்ச முண்டா
நெஞ்ச மனத்தீரே
நீற்ற ரேற்றர் நீல கண்டர்
நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்ற கோயி லெதிர்கொள் பாடி
யென்ப தடைவாமே.

சுந்தரர் தேவாரம்.

["நிறைபுனல்" என்னும் விளச்சீர் வந்தது காண்க.]

### (2) எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

இது "நால்விள மும்மா"வாய் வருவது முறைமையாம். ஆயினும் சம்பந்தர் வன்றொண்டர் போன்ற இசைவல்லார் இவ்விதிக்கு முரணுகக் கவிபாடினுல் நாம் அவ்விதிவிலக்கை அங்கீகரிக்க வேண்டுமேயாயினும், நாம் பாடும் எழுசீர் ஆசிரியவிருத்தம் அம்மாதிரி பாடொணுது என்பது நமது மாணவர் அறிய வேண்டியதாம்.

சீரணி திகழ்திரு மார்பில் வெண்ணூலர்
திரிபுர மெரிசெய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர் பங்கர்
மான்மறி யேந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை யண்ணல்
கண்ணுதல் விண்ணவ ரேத்தும்
பாரணி திகழ்தரு நான்மறை யாளர்
பாம்புர நன்னக ராரே.

சம்பந்தர் - திருப்பாம்புரம் பண் - தக்கராகம்.

இதில் மாச்சீர் இரண்டே வந்தமை காண்க. இது சந்த விருத்தமென்று கொள்வதற்கும் இடமில்லை. ஆதலால் இது எழுசீர்விருத்த விதி விலக்காம்.

### (3) கலிநிலைத் துறை

இரண்டு காய்ச்சீரும் இரண்டு மாச்சீரும் ஒரு காய்ச்சீருமாய் வரத் திருஞான சம்பந்தர் கலித்துறை பாடியுள்ளார். ஆயினும் அது பின்னர் நமது இலக்கியத்தில் வழங்கவில்லை:—

உருவார்ந்த மெல்லியலோர் பாக
முடையீ ரடைவோர்க்கு
கருவார்ந்த வானுலகங் காட்டிக்
கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தண்கடலொண் சங்கம்
திளைக்கும் பூம்புகலி
திருவார்ந்த கோயிலே கோயி
லாகத் திகழ்ந்தீரே.

சம்பந்தர் - திருப்புகலி - பண் - காந்தாரம் 1.

திருஞானசம்பந்தர் பாடிய திருவாலங்காடு பண் தக்கராகப் பதிகம் ஒருவகை விதிவிலக்கானகலிநிலைத் துறையாகும். அதுவும் அவருக்குப் பின்னர் யாரும் கையாள வில்லை.

துஞ்ச வருவாருந் தொழுவிப்
பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்
பாரு முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்
கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங்
காட்டெம் மடிகளே.

முதல்வகுப்பு கலிநிலைத்துறை ஒருசீர் குன்றிக் கலிவிருத்தமாகவும் வரும். இது அப்பர் தேவாரத்திலும் காணலாம்—

செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின் றவர்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே

திருப்புகலூர் - பண் - இந்தளம் 1.

இவைகளே தமிழிலக்கியத்தில் வழங்கும் சந்தமற்ற(சாதாரண) விருத்தங்களாம். இனி, சந்த விருத்தங்களும் அவற்றின் அமைப்பும் காண்போம்.



# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

5-ம் பத்து 10-ம் தசகம்

[700-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பாசுரம்.

பெய்யும் பூங்குழற் பேய்முலை யுண்ட பிள்ளைத்
தேற்றமும் பேர்ந்தோர் சாடிறச்
செய்ய பாத மொன்றாற் செய்த
நின்சிறுச் சேவகமு
நெய்யுண் வார்த்தையு ளன்னை கோல்கொள்ள
நீயுன் றாமரைக் கண்க ணீர்மல்கப்
பையவே நிலையும் வந்தென்
னெஞ்சை யுருக்குங்களே

பதக்குறிப்புக்கள்:—சாடு-சகடம், வண்டி-சகடம், இற - நாசமடைய, சிறுசேவகம்-உன்னுடைய பாலிய அவஸ்தையிலேயே காண்பித்த பராக்கிரமம், தேற்றம் - சந்தேஹ விபரீதமற்ற மனத்தெளிவு.

பொழிப்புரை :—பூக்கள் கொண்டு சூடிய கூந்தலை யசோதைப்பிராட்டிபோல் முடிந்து தன் தாயைப் போல் மாறுவேஷம் பூண்டுகொண்டு முலை உண்ண வைத்த பூதனை யாகிய அரக்கியின் உயிரை, அவளின் முலைப்பாலோடு உண்ட ஆச்சரியமும், தன்னுடைய செந்தாமரைப்போன்ற ஓர் காலால் சகடாசுரனை உதைத்துக் கொன்ற பராக்கிரமும், நெய்யைத்தான் திருடி அமுதுசெய்துவிட்டா ரென்று பிரஸ்தாபம் பிறக்கையில் யசோதைபிராட்டியார் தன்னை அடிக்கக் கோல்கொள்ளுகிறாளென்று நடுங்கித் தன் தாமரைக் கண்கள் அழுது கண்ணீர்மிகச் சுரந்ததும் என்னெஞ்சத்தை யுருக்குகின்றன. இந்த அவஸ்தைகளில் ஒன்றையாவது நிதானித்து அவகாசித் தனுபவிக்கச் சக்தனாயிருக்கின்றே னல்லேன்.

4-ம் பாசுரம்.

கள்ள வேடத்தைக் கொண்டுபோய்ப் புரம் புக்க
வாறும் கலந்த சுரரை
உள்ளம் பேதஞ் செய்திட்
டுயிருண்ட வுபாயங்களும்
வெள்ளநீர்ச் சடையானு நின்னிடை
வேறலாமை விளங்க நின்றதும்
உள்ள முள்குடந் தென்னுயிரை
யுருக்கி யுண்ணுமே.

உரை:—கள்ள வேடத்தை - எல்லாரும் மோஹிக்கும்படியான பௌத்தாவதாரத்தை,கொண்டு-பூண்டு, புரம்போய்ப் புக்கவாறும் - ராக்ஷஸர்களுடைய புரங்களிலே எறும்புகள் ஈக்கள்மரித்துப்போமென்று ஒவ்வொரு அடியாகக் கால்வைத்து ஜாக்கிரதையாய் நடந்து, "அஹிம்ஸா பரமோ தர்மா" என்று தான் போட்ட வேஷத்தை ருஜூப்படுத்திக் காட்டிஅசுரர்களைத் தனக்கிணங்க வைதீகதர்மத்தைவிட்டு நடிக்கச்செய்த ஏற்பாடும், உள்ளபேதம்...உபாயங்களும் - சமணராயும் பௌத்தராயும் புத்தியை மாற்றிக்கொண்டு சுவரூபம் இழக்கச்செய்ததும்) சுவரூபம் இழப்பது ஒருவாறு ஜந்மசேதமென்று அபிப்பிராயம்)வெள்ளநீர்ச் சடையானும்-கங்கையை ஜடையில் தரித்த சிவபிரானும், நின்னிடைவேறலாமை-நீ ஆத்மாபோலும்தான் சரீரம்போலும், ஒன்றாக விளங்க நின்றதும்-வேதப் பிரமாணங்களும் பிரசித்தமாகும்படி தோன்றி நிற்பதும், உள்ளம்—என் மனதை, உள் குடைந்து - எப்போ நினைத்தாலும் மனதில் உதித்துக் கவர்ந்துகொண்டு, என்னுயிரை-என் ஸ்வரூபத்தை, உருக்கி உண்ணும்-நீராக்கி வருத்துகின்றது.

குறிப்பு:—மஹாவிஷ்ணுவின் ஓர் அவதார விசேஷத்தில் சிவபெருமான் அவரது இடப்பக்கத்தில் வீற்றிருந்தார். அதை நினைத்து இப்பாசுரம் உரைப்பதாகக் கூறினுலும் பொருந்தும்.

189163

5-ம் பாசுரம்.

உண்ண வானவர் கோனுக்
காய ரொருப்படுத்த வடிச லுண்டதும்
வண்ண மால்வரை யெடுத்து
மழை காத்தது
மண்ணை முன்படைத் துண்டுமிழ்ந்து
கடந்திடந்து மணந்த மாயங்க
ளெண்ணுந் தோறு மென்னெஞ் செரிவாய்
மெழுகொக்கு நின்றே.

உரை:—ஆயர் - இடையர், வானவர் கோனுக்கு - இந்திரனுக்கு, உண்ண -உண்ணும்படி, ஒருப்படுத்த- படைத்த, அடிசில் - அன்னத்தை, உண்டதும் - தானே உண்டதும், அதனால் சீற்றம் கொண்ட தேவேந்திரன் ஏவிய ஸப்த காளமேகங்களும் மழையை வர்ஷிக்க, வண்ண மால்வரை எடுத்து மழை காத்ததும்—கோபாலர்களையும் பசுக்களையும் கோவர்த்தனகிரி மலையைக் கையிலெடுத்துக்கொண்டு அதன் கீழ் இறுத்தி அவர்கள்மேல் மழை படாமல் காப்பாற்றியதும், மண்ணை - பூமியை, முன் - பூர்வகாலத்தில், படைத்து - சிருஷ்டித்து, உண்டு-பிரளயம் வந்தவாறே வயிற்றிலே வைத்து ரக்ஷித்து, கடந்து - மஹாபலிச் சக்கரவர்த்தி இந்திரனிடத்திலிருந்து கைப்பற்றிக்கொண்டு போகாதே மூவடியால் அளந்து ரக்ஷித்ததும், இடந்து - பிரளய வெள்ளத்திலிருந்து முழுகிப் போகாதே தூக்கியும், மணந்த - அப்பூமிப் பிராட்டி தன்னையே பெண்டீராக வராஹாவதாரத்தில் கல்யாணம் செய்துகொண்ட, மாயங்களும் - ஆச்சரிய சேஷ்டிதங்களும், எண்ணுந்தோறும் என்னெஞ்சு, நின்று - ஒருகால் முடியாதே மெள்ள மெள்ள நின்று, எரிவாய் மெழுகு - தீபத்தில் பட்ட மெழுக்குப்போல், ஒக்கும் - உருகா நிற்கும்.

குறிப்பு:—வடஇந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் முன்னொருக்கால் இந்திரனுக்குத் திருவிழா செய்து பூஜித்தார்கள். ஆரியத்தில், ஸ்ரீமத் பாகவத்திலும், தமிழில் மணிமேகலையிலும் இத் திருவிழா இரண்டு நாட்டிலும் நடந்தேறிய சிறப்புக் காணலாம்.

# கலித்தொகை

[701-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக்கலி 28

இளவேனிற்கால வரவின்கண் ஆற்ருது வருந்திய தலைவியைத் தோழி ஆற்றியிருக்குமாறு வற்புறுத்த அதற்கு மாருக வருந்தியவளுக்கு அவள் தலைவனது வரவை உணர்ந்து பெருங்களிப்பாற் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

---

தோல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலி
னல்லாந்தா ரலவுற வீன்றவள் கிடக்கைபோற்
பல்பய முதவிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறுநீஇப் புதுநல மேர்தர
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
விளையவ ரைம்பால்போ லெக்கர் போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலைபோ
லாயிதழ்ப் பன்மல ரையகொங் குறைத்தர
மேதக விளவேனி லிறுத்தந்த பொழுதின்கண்

சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன் னிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தரூஉம்

போழ்துள்ளார் துறந்தார்கட் புரிவாடுங் கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் கரப்பென்மற் கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணு மிருந்தும்பி
யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலை யலைத்தரூஉம்

தோடிநிலை நெகிழ்த்தார்கட் டோயுமென் னாருயிர்
வடுநீங்கு கிளவியாய் வலிப்பென்மன் வலிப்பவு
நெடுநிலாத் திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றங் கங்குல்வந் தலைத்தரூஉம்

எனவாங்கு

வருந்தினை வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னோக்கா தேகிநம்
மருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் றேமொழி படர்ந்தே.

(தரவு)

(வரி 1 - 9) வயவு நோய் - கருப்பம் தங்கிய காலத்திற் பிறக்கும் வேட்கையாகிய நோய், தொல் எழில் வரைத்து அன்றி - பழைய அழகைக் கெடுக்கின்ற அளவிலே நிற்பதன்றி, நலிதலின்-(அதற்குமேலும்) வருத்துவதனலே, அல்லாந்தார் - அதற்கு வருந்திய சுற்றத்தார், அலவுற ஈன்றவள் கிடக்கைபோல் - பின்னர்ப் பெரிதும் வருத்தப் புத்திரனைப் பெற்றவள்போல, பல் பயம் உதவிய-பலவிதமான (பயிர்களாகிய) பயனை உண்டாக்கி உதவிய காரணத்தினல், பசுமைதீர் அகல்ஞாலம் - பசுமைத்தன்மை நீங்கிய அகன்ற உலகம் (அத்தாய் தான் கொண்ட ஈன்ற அணிமை நீங்கிப் புதிய அழகைப் பெற்ருற்போல) புல்லிய - தான் கொண்ட, புனிறு ஒரீஇ புதுநலம் ஏர்தர - ஈன்ற அணிமை நீங்கிப் புதிய அழகோடு தோன்றவும், வளையவர் வண்டல்போல் - வளையல்களை அணிந்த சிறு பெண்கள் செய்த வண்டற் பாவைபோல், வார்மணல் வடு கொள - பரந்த மணல் வடுவுடையவும், இளையவர் ஐம்பால் போல் - இளையோருடைய மயிர்போல், எக்கர் போழ்ந்து - மணல் மேடுகளை அறுத்துக்கொண்டு, அறல் வார - நீர் ஒழுகவும், மாயவள் திதலைபோல் - மாமை நிறத்தை உடையவளது தேமல் போல, மா ஈன்ற தளிர் மிசை - மாமரங்கள் தோற்றுவித்த (சிறிது முற்றிய) தளிர்களின்மே லுள்ள, ஆய் இதழ் பல்மலர் - அழகிய இதழ்களையுடைய பல மலர்களினுடைய, ஐய கொங்கு உறைத்தர - வியக்கத்தக்க மகரந்தப் பொடிகள் உதிர்தலைச் செய்யவும், மேதக - பெருமை பொருந்தவும், இளவேனில்- இளவேனிற்காலம், இறுத்தந்த பொழுதின்கண் - வந்து தங்கிய பொழுதிலே.

'ஐ' என்ற உரிச்சொல் 'ஐய' என ஈறு திரிந்தது. (சிந். 3019 - "செய்யுளின் உரையை நோக்குக.

ஏர்தர, வடுக்கொள, அறல்வார, உறைத்தர, மேதக இளவேனில் இறுத்தந்த பொழுது எனக் கூட்டுக.

பயன்தரும் நிலையிலுள்ள பயிர்களையுடைய நிலத்திற்குக் கருவுற்ற பெண்ணும், அறுவடையான நிலத்திற்குப் புதல்வனைப் பெற்றெடுத்த அம்மகளின் அழகற்றுச் செயலற்றுப் படுத்துக்கிடக்கும் நிலையும், அந்நிலத்தினின்று தோன்றிய பயனுக்குப் புதல்வனும், பின்னர் இளவேனிற் காலத்தாற் பொலிவுறும் அந்நிலத்திற்கு ஈன்ற அணிமை நீங்கிப் புதிய அழகைப் பெறும் அம்மகளும் உவமை.

(தாழிசை)

(வரி 10-13) சில்மொழி - சிலசொற்களே கூறும் இயல்புடையாய், சேயார்கண் சென்ற - தூரத்திலிருக்கின்ற தலைவரிடத்திற் சென்ற, என் நெஞ்சினை - எனது மனத்தினை, நீ கூறும் வரைத்து அன்றி - நீ கூறும் அளவேயன்றி நிறுப்பென்மன் - (அதற்குமேலும்) ஆற்றி நிறுத்துவேன்; (ஆனல்) நிறை நீவி - (நான்) ஆற்றி நிறுத்தலைக் கைவிடும்படி, வாய்விரிபு பனி ஏற்ற - வாய் விரிந்து பனியைப்பெற்று நின்ற, விரவு பல் மலர் தீண்டி - பலவகையாகக் கலத்தலையுடைய பல மலர்களை அளைந்துவந்து, நோய் சேர்ந்த - (பிரிந்தார்க்கு) நோய் செய்தற்குக் காரணமான, வைகலான் - இளவேனிற் காலத்தில், வாடை வந்து அலைத்தரூஉம் - வாடைக்காற்ருனது வந்து வருத்தத்தைத் தரும்!

'தீங்கிளவி ஒன்று இரண்டுதான் மிழற்றும் ஒருநாட் காறும்' (சிந். 1353) ஆகலின் 'சின்மொழி' என்ருர்.

'நீவி' என்பதை 'நீவ' எனத் திரிக்க.

வைகலான் - உருபு மயக்கம்.

(வரி 14-17) சுடர் இழாய்-ஒளி பொருந்திய ஆபரணங்களை உடையவளே, போழ்து உள்ளார் - இளவேனிற் காலத்தை நினையாதவராய், துறந்தார்கண் - நம்மைப் பிரிந்திருந்தவரிடத்தில், புரி - (மனம்) விரும்புதலால், வாடும் கொள்கையை - (என்மேனி) வாடுகின்ற தன்மையை, சூழ்பு - (பிறர் அறியலாகாதென்று) எண்ணி, கரப்பன்மன்- பெரிதும் மறைப்பேன், கை நீவி - (ஆனல் யான் மறைப்பதைக்) கைவிடும்படி, வீழ்கதிர் - சூரியனது விழுகின்ற கதிர்கள், விடுத்த - மலரச்செய்த, பூ இருந்து உண்ணும் இருந்தும்பி-பூவிலிருந்து தேனை உண்ணுகின்ற கருமையான வண்டுகள், யாழ் கொண்ட - யாழினது ஓசையையொத்த, இமிழ் இசை இயல்மாலை - ஒலிக்கின்ற ஓசை பொருந்திய மாலைப்பொழுதானது, அலைத்தரூஉம்-(வந்து) வருத்தத்தைத் தரும்!

கொண்ட - உவம உருபு

ஆங்கு, ஏ - அசைகள்

(வரி18-21) வடுநீங்கு கிளவியாய்-குற்றமற்ற சொற்களை உடையவளே, தொடி - தொடிகள், நிலை-நிற்கின்ற இடமாகிய தோளினின்றும், நெகிழ்த்தார்கண் - கழலும்படி செய்தவரிடத்தில், தோயும் என் ஆருயிர்-(போய்ப்) பொருந்தும் எனது அருமையான உயிரை, வலிப்பன்மன் - (அவரிடத்துச் சென்று பொருந்தாமல்) பெரிதும் (மீட்டுக் கொள்ளத்) துணிவேன், வலிப்பவும் - (யான் அங்ஙனம்) துணியவும், திறந்து உண்ண - வண்டுகள் திறந்து (தேனை) உண்ணும்படி, நிரை இதழ் வாய்விட்ட-வரிசையாகப் பொருந்தின இதழ்கள் மலர்ந்த பூக்கள், கமழ் நாற்றம் - வீசுகின்ற வாசனையையுடைய, நெடுநிலா கங்குல்-பெரிய நிலவையுடைய இராக்காலம், வந்து அலைத்தரூஉம் - வந்து வருத்தத்தைச் செய்யும்!

(தனிச்சோல்)

என - என்று சொல்லி, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 23-26) வருந்தினை-வருந்தினய், வதிந்தநின்வளை நீங்க - கையிலே தங்கின நினது வளை கழலும்படி, சேய் நாட்டு - தூரதேயத்தில், பிரிந்து செய்பொருள் பிணி - பிரிந்திருந்து தேடும் பொருட்பற்றினலே, பின் நோக்காது ஏகி - திரும்பிப் பாராமல் சென்று, திருந்து எயிறு இலங்கு-திருந்தின பற்கள் விளங்குதற்குக் காரணமான, நின் தே மொழி படர்ந்து-நினது தேன்போலும் மொழியை நினைந்து, நம் அருந்துயர்-நமது அரிய துன்பத்தை, களைஞர் வந்தனர் - களைபவராய்த் தலைவர் வந்தார்(இனி நீ வருந்தாதே!)

---

# தத்வஞான மென்ருே லென்னே?

'Life resembles a spectacle. Some attend it in order to participate in the contests, others to do business, the best to look on; so it is in life. The vulgar seek fame and money; the philosophers truth.'

"We do not live for this life, but for the secret that lies behind it."

"Philosophy is not understood by simply contemplating the efforts of others, each must make the effort his own. Philosophy is not a pastime; it is a discipline, or it is nothing."

"A philosophy is inevitably the expression of a mental attitude which we assume towards life and towards the universe."

"Philosophy serves culture, not by the fancied gift of absolute or transcendental knowledge but by suggesting questions which help one to detect the passion, and strangeness and dramatic contrasts of life."

பீடிகை:—மாந்தரிற் பெரும்பாலோர் சுய விசாரிப்பினலும் சுயாநுபவத்தினலும் மட்டுமே தம் வாழ்வை நடாத்தி வருவதில்லை. மற்று, சீர் முறை அல்லது ஒழுங்குடன் பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும் ஆதியிலேயே விதிக்கப்பட்டுள்ள ஓர் நல்ல முடிபை நோக்கி இயங்குவன என்பதுடன் மானுடராசியின் நன்மைக்காகவேதான் உலகாதிகளெல்லாம் தோன்றி மாறி வருவன என்னும் ஒருஎண்ணமும் கலந்த நம்பிக்கையினலும், ஒவ்வொருவனும் தன் பெற்ருேர்களினின்றும் வாழ்க்கையில் தான் வகிக்கும் ஸ்தானங்களினின்றும் ஒத்துச் செய்யுங் கருமங்களினின்றும் உண்டாகும் பாவனைகளாலும், சமூக வாழ்க்கையில் சம்பாஷணை மூலமாக உண்டாகும் வாசா ஞானத்தினலும் தப்பு அபிப்பிராயங்களாலும், பல்வேறு கலைகளினின்றும் தத்வ வகுப்புக்களினின்றும் மதக் கட்சிகளினின்றும் மேலோட்டாகப் பார்த்துப் பொறுக்கி மனத்துட் புகுத்திய கற்பனைகளாலும் தன்னுடைய வாழ்வை மனிதன் நடத்துகின்ருன். பொதுவில், மானுடர் மனமானது மேற்காட்டிய மருட்படலங்களாற் சூழப்பட்டு இயங்குவதாகும்'

இன்னமும்—"உலகாதிகளின் சீர்மையையும், மானுடவாழ்க்கையின் மாண்பையும்கற்பித்து அதி உன்னதமாக உயர்ப்பித்தலும், தனக்கு அநுகூலமானவைகளென்று சுயத் தேர்ச்சியினலோ அல்லது அயலவர் பலவந்தத்தினலோ கொள்ளப்பட்ட அபிப்பிராயங்களின் தாராதரத்தையும் உண்மையையும்பயனையும் அமைதியுடன் சீர் தூக்கி அறியாமல், அவைகள் என்றும் நின்று நிலவக்கூடிய நன்மைகளென மருண்டு,இம்மருட்கையை மருட்கையெனத் தெளிவுருமல், அதை ஊர்ஜிதப்படுத்தற்குப் பற்பல காரணங்களையும் சான்றுகளையும் வேண்டிய அளவு குவித்தலும், பின் அவைகளை ஆப்தமொழிகளெனப் பாவித்துப் பணிதலும், தனக்கு ஆகாதவைகளைத் திரித்துத் தூற்றலும், கைகூடி வருபவைகளையே கவனித்துப் பலியாதவைகளைப் புறத்தே தள்ளலும், சுலபமாக விரைவில் ஏற்கக்கூடிய கூற்றுக்களையும் நடத்தைகளையுமே ஏற்றுக்கொண்டு,விசாரிப்பு ஊக்கம்உழைப்புப்பொறுமைகளால் பெறவேண்டுபவைகளை நிராகரித்தலும், பார்வைக்கு நேர்த்தியானவைகளையே கவனித்தலும், எஞ்ஞான்றும் மாறி மறைபவைகளை உருவகப்படுத்தி மேலாய குணங்களைச் சார்த்தித் தெய்வாம்சங்களென மயங்கி முழந்தாளிட்டுத் தொழுதலும் மாந்தர் தம் விசேஷ குணதிசயங்களிற் சிலவாவன. மேலும், அறிஞர்களுக்குள் ஒருசாரார், மானுடர்க்குள் உள்ள வேற்றுமைகளையே ஊன்றிப் பார்த்துவருவதையும், ஒற்றுமைகளையே மற்ருெரு சாரார் மிகைபடக் கூறுதலையும், ஓர் வகுப்பினர் கழிந்தவைகளையே சிறப்பிப்பதையும், மற்ருெரு வகுப்பினர் கழிந்தவைகளைத் துச்சமென முற்றிலும் ஒதுக்கி, சென்றவைகளுக்கும் செல்பவைகளுக்கும் யாதொரு பந்தமுமில்லையெனச் சாதித்து, 'நவீனம்' என்ற பூதத்தின் வயப்பட்டுப் பொருளும் பொருத்தமுமற்ற இழிவுடைய நடிப்புக்களில் தலையிட்டு உழல்வதையும் அறியாதவரிலர். இவ் விபரீதக் குணதிசயங்களினின்றும், குழம்பிய நோக்கங்களினின்றும் மௌட்டியமாகிய அந்தகாரம் ஆழ்ந்துபரந்து கவிகின்றது."

* * *

தத்வ ஞான மென்ருே லென்னே? பிரகிருதி சாஸ்திரங்களும் மதங்களும் எழிற்கலைகளும் அறிவிக்காததும் அறிவிக்கக் கூடாததுமான தனி விஷயத்தின் விவரிப்போ, அல்லது, அவைகள் அறிவுறுத்தும் உண்மைகளையே, வித்வ மமதையினற் கவரப்பட்டு, அனைவர்க்கும் எளிதில் விளங்காத பரிபாஷையில் அறிவிப்பதோ, அல்லது, அக்கலைகளின் ஆராய்ச்சி முடிபுகளின் வெறுந் தொகுதியோ, அல்லது, அனைத்திற்கும் அடியும் முடியுமான சத்தின் விளக்கமோ?

இவ்வுலகம் எத்தன்மைத்து? வாழ்க்கைப் போக்கின் இலக்ஷியம் கருத்து அல்லது பயன் என்னை? சுகதுக்கங்களின், ஜனன மரணங்களின், நோக்கம் யாது? அந் நோக்கத்தை அறிந்து, அதை நிறைவேற்றுதற்கான, அதாவது தெளிந்து அநுபவித்தற்கான உபாயம் யாது? வாழ்க்கையானது நீர்க்குமிழிபோல் தோன்றி உடைந்து அழிவதோ, அல்லது, ஓர் முடிவை முன்னிட்டு வளர்ந்து நிரந்தரமாக நிலைத்திருப்பதோ? ஆன்மா என்பது என்னை? அவ்வான்மாவிற்கும் தேகத்திற்குமுள்ள ஒற்றுமை எத்தன்மையது? சரீரம் அழிகையில், ஆன்மாவும் அழிகின்றதோ? ஆன்மா நித்யத்வம் பொருந்தியதென்போமாயின், இதை நிரூபித்தற்கான சான்றுகள் யாவை? பிரபஞ்சாதிகளுள்ளும் அப்பாலும் ஞானமும் கருணையும் வன்மையும் ததும்பப்பெற்ற வஸ்து ஒன்றுளது என்பதற்கு ஆதாரம் என்னை? இவைகளைப்பற்றிய அறிவு எவ்வாறு வளர்கின்றதோ? இப்பிரச்னைகள் ஒவ்வொரு அறிஞர் மனத்திலும் உதிக்கின்றன. இவைகளை விரித்து, உண்மையை யறிந்து, ஆனந்தநிலையெய்துதற்கான நெறி யாதோ?

ஞானமார்க்கத்தைப் பற்றித் தொடர்வதற்கேற்ற சக்தி வாய்க்கப்பெற்றவன் மனிதன். விலங்குகளுக்கும்மானுடர்க்குமுள்ளவித்தியாசம் யாதெனின்,விஷயநிகழ்ச்சிகளை முன்பின் ஒத்திட்டுப் பார்த்தலும், உயர்வு தாழ்வு நன்மை தீமைகளென்ற பேதகங்களை ஏற்படுத்தி, ஒன்றைப்பற்றி மற்றதை விடுத்து மேன்மேல் உயர்தலுமேயாம். இவ் விசேஷ குணங்களை அபிவிர்த்தி செய்தலும், உயரிய சிந்தையுடன் தூய செயல்களில் பிரவிர்த்தித்தலும், உலகாதிகளையும் தன்னையும், தனக்கும் உலகாதிகளுக்கும் உள்ள இணக்கத்தையும், பற்றித் தெளிதலும், அல்லது அறிய முயற்சி செய்தலும் மானுடத்வத்தின் இலக்ஷணங்களாம்.

பிரகிருதிசாஸ்திர சோதனைகளின் முடிபுகளினின்று மாந்தர்க்கு உண்டாகும் நற்பயன்களையும் அறிவினது விசாலத்தையும் மறுத்தலும், அல்லது வெறுத்துப் பழித்தலும் தவறாகும். எனினும், அந்தச் சாஸ்திரங்களின் துணிபுகளே முடிவான உண்மையெனக்கொண்டு அவைகளுக்கும் மேலாய ஆதாரமாய் விளங்குகின்ற மூலசக்தியை மறுத்தல் ஞானமன்று. சகலத்தையும் பூர்ண வஸ்துவானது தன்னுள் ளடக்கி நிற்பதாகும். உண்மையில், கடவுள் இயற்கை ஆன்மா வாகிய மூன்றும் ஒன்றேயாம்; முதற்பொருள் பின்னவைகளுக்கு ஆதாரமாகவும் பக்கபலமாகவும் துணைக்கருவியாகவும் நிற்பதுபோலும்; அதாவது, பின்னவை முன்னதினின்று இழிந்து தோன்றிப் பரவிப் பின், படிப்படியாய் வளர்ந்து உயர்ந்து அப்பூரணத்துள் ஒடுங்கி ஒன்றுவனபோலும்.

வயிறு பெரியதோ, அல்லது இதயமும் மனமும் மேலானவைகளோ என வினவி வாதித்துநிற்றல் அவிவேகமாமாகும். ஜீவனது வளர்ச்சிக்கும் இன்பத்திற்கும் அவைகள் இணக்கத்துடன் அவ்வதற்கான தொழிலைச் சரியாக இயற்றிவர வேண்டுமென்பது யாவரும் அறிந்து ஒப்பிய விஷயமன்றோ? இகலோக சுகாநுபவங்களுக்கு ஆதாரமாவன பிரகிருதிசாஸ்திர ஆராய்ச்சி வளர்ச்சி முடிபுகளாம்; அநுபவமூலமாகத்தான் அச்சாஸ்திரங்கள் மேன்மேல் வளர்ந்து திருந்தி வியாபிக்கின்றன.

*        *        *

“சித்தாந்தமும் அநுஷ்டானமும் ஒன்றற்கொன்று சார்பானவை, அல்லது, ஒன்றிற்குள் ஒன்று ஊடுருவிப் பாய்ந்து, ஒன்றையொன்று பிரதிபலிக்கச் செய்வனபோலும். இவைகளைப் பிரித்து உழல்வதினின்றுதான் குழப்பமும் ஆவேசமும் வழக்கும் பிரபலமாகின்றன. சிந்தனை சொல் செயல்கள், பருந்தும் நிழலும்போல், ஒன்றையொன்று பிணைந்து செல்ல வேண்டும். செயல்களாக மாற்றப்படாத எண்ணம் மாத்திரம் வீண்; முன்பின் ஆய்ந்தோய்ந்து பாராத செயல் மாத்திரம் அபாயகரமானது.” அறிஞர்கள் இவ்வாறு பன்முறை புகட்டிவந்தபோதிலும், காலம் இடம் தெய்விகத்வம் (Chance) என்றவைகளால் பிணிக்கப்பட்டுள்ள உலகவாழ்க்கையில் அவ் விதிகளைப் பூரணமாக நிறைவேற்றி உய்தற்கு இயலாதென்பதைக் கவனிக்கவேண்டும். சிந்தனை சொல் செயல்களுள் எப்பொழுதும் பரஸ்பர முரணும் வித்தியாசங்களும்இருந்தேவரும்; சொல் செயல்களில் எஞ்ஞான்றும் குற்றங் குறைகள் இருந்தே தீர்வனபோலும். எனினும், லக்ஷியம் முற்றிலும் கைகூடிவரப்பெறுததினால் அதை அவமதித்தலும், கர்மங்களில் சிற்சிலகுறைகளும் களங்கங்களும் தவறுகளும் எக்காலும்தோன்றியே வருவதால் அவைகளைக் கடிந்து துறத்தலும் ஞான வளர்ச்சிக்கும் வளப்பத்திற்கும் தகாத குணங்களாவனபோலும். அவைகளுக்குள்ள வேற்றுமை முரண்பாடு இழுக்குக்களின் அளவையும்தன்மையையும் சக்தியையும் சிறுக்கி மாற்றவேண்டுமென்பதையும் இவ்விதஞ் செய்தற்கு இயலுமென்பதையும் நாம் மறக்கக்கூடாது.

*        *        *

மேற்சொல்லியபடி, ஒவ்வொருவனும் தான் பிறந்து வளர்ந்து விவகரிக்கின்ற சமூகத்தின் அல்லது, நாட்டினரின் பிரதிபிம்பமாவன்; சமூகத்திற்கான கர்மங்களை ஏற்று, தன்னுடைய கடமைகளை நிறைவேற்றி, சமூகவிதிகளைக் குருட்டுத்தனமாகத் தொடர்ந்து, தன் வாழ்நாளைக் கழிப்பவன். எனினும், மிருகங்களைப் போல், புலன்கள்வழி யிழுக்கப்பட்டு, நினைத்தவைகளையே நினைத்து, செய்தவைகளையே செய்து, மாய்வதான அவலக்குணம் பொருந்தியவனல்லன். ஆதலால், சிற்சில சமயங்களில், அந்தரான்மாவின் கிளர்ச்சியால் பிரபஞ்சசூக்ஷமத்தையும், ஜீவனின் மர்மத்தையும், கர்மங்களின் முடிபையும், மரணத்தின் கருத்தையும் அறியவேண்டுமென்ற விருப்பம் எழுகின்றது. ஆனால், சமூகக் கட்டுப்பாடுகளினாலும், ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட மருட்படலங்களாலும் மூடியழுத்தப்படுவதால், தக்கனசெய்து மேலெழும்ப முடியாமற்போகின்றது! ஆயினும், சமூகத் தளைகளைத் தெறித்து, பொதுஜனங்களின் அற்ப வியாபாரங்களை விடுத்து, மேற்சொல்லிய பிரச்னைகளை அறிவிக்கும் வழிகளில் தம் மனத்தைச் செலுத்தி, உடலைத் தியாகித்து, ஓர் உறுதி முடிபுக்கு வரும்வரையிலும், அல்லும் பகலும் அநவரதமும், சில பேரான்மாக்கள் விசாரிப்பில் புகுகின்றார்கள். இவர்கள்தாம் ஞானிகளெனப்படுவர்கள்.

“மாந்தரனைவராலும் கைக்கொண்டுமுடிப்பதற்கு முடியாத கர்மங்களையும், கடமைகளையும், அறியக்கூடாத கற்பனைகளையும் பின்னிக் கழறுபவர் வித்தகர்;



மேலும், அவர்களில்எந்த இருவர்க்குள்ளாகிலும்எவ்விஷயத்தைப் பற்றியும், உறுதியும் தெளிவும் பொருத்தமுடைய சித்தாந்தமும் இதுகாறும் வெளியாகவில்லை! ஆதலால், அவர்களை நாம் பின்பற்றித் தொடர்வோமாயின், நம்முடைய வாணாள் வியர்த்தமாகும், வாழ்க்கை ஓர் பெருங் களிக்கூத்தாக முடியும்!” எனச் சில போலிக்கலைஞர் பிதற்றுகிறார்கள். நிஷ்கபட மனத்துடன் தத்வஞான சரிதங்களைப் படிப்போமாயின் அக்கூற்றுக்களின் பொய்மைபுலனாகும். “வானத்தை அண்ணாந்து பார்த்து நடந்து கிணற்றில் வீழ்ந்துதவிக்கும் பேதையர் ஞானிகள்போலும்! மூல தத்வஞானமானது ஒருபிடி அன்னம் அளிக்கவாவது, அல்லது, சரீர போஷணைக் கானவைகளைப் பெற்று அநுபவித்தற்கான உபாயங்களை உணர்த்துவதற்காவது வல்லதன்று! ஓர் இருட்டறையில், அவ்விடத்தில்லாத கறுப்புக்குல்லாவைத்தேடும் குருடரை ஒத்தவர் வித்தகர்கள்!” என எத்தனையோ பலபுத்திசாலிகள் பரிகசிக்கலாம். எவரெது கூறினுமென்? கீழும் சுற்றிலுமுள்ளவைகளையே உற்றுநோக்கி ஓடியலைந்து கடைசியில் அவைகளால் அழிபடுவதைக் காட்டிலும் முன்னது உயர்ந்ததன்றோ? இத்தகையர்க்கும் நிலத்தைத் தோண்டிக் கிடைத்தவைகளைப் புசித்துப் புதர்களில் ஒடுங்கி உறங்கும் பன்றிகளுக்கும் யாதொரு பேதமுமில்லை போலும்.

மூல விஷயங்களின் தத்வத்தை எவ்வித்தகரும் உறுதியுடன் தெரிவிக்காததினின்று அப் பிரச்னைகளை எழுப்புதல் வீணெனவும், அவைகளைப்பற்றிய ஆராய்ச்சியிற் புகுதல் மதிமயக்கமெனவும் கண்டித்தல் தவறாகும். இப்பூவுலகில், மனிதன் தான் தோன்றிய நாள்முதல் இடைவிடாமல் அப்பிரச்னைகளால் தூண்டப்பட்டு, பிறரது மதிப்பு அவமதிப்புரைகளைச் சிறிதும் கவனியாமல், தன் அறிவு வளப்பத்திற்கேற்றபடி அவைகளைப்பற்றி மீட்டுமீட்டும் விசாரித்துஆராய்ந்து வருதலே தத்வஞானத்தின் அவசியத்திற்கும், சிறப்பிற்குமான சான்றுகளாம்.

“எவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து பார்ப்பினும், மானுட அறிவைக்கொண்டு அப்பிரச்னைகள்விடுக்கப்படுமோ? நாம் கையாளும் ஆராய்ச்சி முறைகள்நம்பத்தக்கனவோ, அல்லது, உறுதிமுடிபுகளை யளிக்கவல்லனவோ?” என்ற கேள்விகளினின்று மானுட அறிவின் எல்லை தன்மை அல்லது சக்தியைப்பற்றிப் புதியதோர் பிரச்னை எழுகின்றது. “இயற்கை உலகைச் சோதித்து உள்ளதையும் இல்லதையும் நிர்ணயித்து, நன்மை தீமையென மதிப்பது மனம். ஆனால், இம் மனத்தின் வலிமையையும், இயக்கத்தையும், தொழிலையும் உணர்த்தும் கருவி யாதோ?” எனச் சிலர் வினவலாம்.—“அம் மனமேயாம்!”

சூக்ஷமவிஷயங்களைப்பற்றி ஐயமறத் தெளிவாக, பருப்பொருள்களைப்போல், அறிதற்கியலாவிடினும், அவைகளின் இருப்பும், தன்மையும், சிறப்பும், ஆட்சியும் ஊகிக்கப்படுகின்றன. “அநுபவத்திற்குட்பட்டனவே உள்ளன; அநுபவத்திற்கு அதீதமாக யாதொன்றுமில்லை” என்னும்பொழுது, இவ்வநுபவத்தின் பொருளென்னையோ? அநுபவங்கள், தம்மை யொட்டிய வரையிலும் உயர்வு தாழ்வு, அல்லது நன்மை தீமை என்ற வரம்புகளும்குணங்களும்அற்றனவாம். அநுபவங்களை அநுபவங்களெனநன்கு தெளிந்து, பலதிறப்பட்ட அநுபவங்களை ஒன்றுபடுத்திஓர் சித்தாந்தத்தை ஏற்படுத்தக்கூடிய ஞானசக்தி பொருந்திய மனமாது அநுபவங்களுக்கெல்லாம் மேலானதென்பதும், இஞ் ஞானசக்தியில்லாமல் அநுபவங்கள் மாத்திரம் பொருளற்றனவென்பதும் புலனாகவில்லையோ? சுருக்கத்தில், தத்வ விஷயங்களை ஆராய்ந்து மதித்து அறிகையில் கவனிக்கவேண்டியவிதிஒன்றுளது; அது யாதெனின், “மறுத்தலும் அழித்தலும்ஒருபொருட்கிளவிக ளல்ல; மறுத்தலால் மறுக்கப்பட்டது மிக்க தெளிவுடனும் வன்மையுடனும் விளங்குவது போலும்! “இலது” என்ற சொல்லே “உளது” என்பதை நிச்சயப்படுத்தற்கான வழியாகவிளங்குகின்றது,” என்பதேயாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |

தைலங்கள் :

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக ” | 0-12-0 |
| பிருங்காமலக ” | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

சாதாரணம்-பாகெட்

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.
189163

# வர்த்தமானம்

**அப்பொழுதும் இப்பொழுதும்:**-அமெரிக்காவில் இலினுப் என்னுமிடத்தில் வசித்துவந்த ஸ்ரீ ஜோன்ஸ் என்பார், தமது மனைவியை விவாகரத்து செய்துகொண்டார். மனைவி வேலையில்லாமல் மீண்டும் அவரிடமே வந்து சமையற்காரியாகச் சேர்ந்திருக்கிறாள். அவள் மனைவியா யிருந்ததைவிட இப்பொழுது ஒரு வேலைக்காரியாகச் சர்வ சுதந்திரமும் பெற்று விளங்குகிறாள். மாத முடிந்தால் அவள் சம்பளம் கைக்கு வந்துவிடுகிறது. சம்பளத்தைப்பற்றி இப்பொழுது கவலையே கிடையாது. வேலை முடிந்ததும் சர்வ சுதந்திரமாக வெளியில் போகிறாள்.

* * *

**விவாக ரத்து:**–புடாபெஸ்ட் வாசியாகிய அலடார் படாக்கி என்பவர் தனது மனைவி நாளுக்கு நாள் உணவைக் குறைத்து 28 இராத்தல் நிறையில் குறைந்தது காரணமாக அவளுக்கும் தனக்கும் இடையிலுள்ள விவாக ஒப்பந்தத்தை நீக்கும்படி, வழக்குத் தொடர்ந்தார். நீதிபதி தனது மனைவியின் தேக நிறையைக் கட்டுப்படுத்தப் புருஷனுக்கு உரிமையுண்டு எனக் கூறி விவாக ஒப்பந்தத்தை நீக்கிவிட்டாராம்.

* * *

**இரண்டு லக்ஷம் வாலிபர் துயரம்:**—அமெரிக்காவில் வக்கீல் பரீக்ஷை வைத்திய பரீக்ஷை முதலியன தேறிக் கலாசாலைப் படிப்பும் படித்த 25-வயதுக்குட்பட்ட வாலிபர்கள் ஆணும் பெண்ணும் உள்ளவர்களில் இரண்டு லக்ஷத்திற்கு மேல் வேலையின்றி ஒவ்வொரு ஊராக நாடோடியைப்போல் திரிந்துகொண்டே கஷ்டத்தை அனுபவிக்கிறார்களாம். இப்படி வருடந்தோறும் படித்த வாலிபர்களின் தொகை வேலையில்லாக் கஷ்டத்தால் அதிகரித்தால் அமெரிக்க நாட்டிற்கே மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்குமென்று மாடர்ன் யூத் என்ற பத்திரிகையின் 25 வயதுடைய ஆசிரியை ஸ்ரீமதி வையோ லேர் கூறுகிறார்.

* * *

சங்கீதத்தில் லயப்பட்டு அவ்வுணர்ச்சியை வெளியிடும்நரம்புகளின் மத்திய ஸ்தானம் பாதத்தில் தான் இருக்கின்றதாம். இதனால்தான் பெரும்பாலோர் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது தம் காலை அசைத்துத் தாளம் போடுகிறார்களாம்.

* * *

**சந்தோஷமா யிருங்கள்:**—மனக்கவலை ஏற்படும் பொழுதெல்லாம் ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டிருந்தால் துக்கம் என்பதே அணுகாது என்று வீயன்னாவில் புதிய போதனை ஒன்று பரவி வருகிறது. சிலர் கஷ்டமில்லாத பொழுதுங்கூடத் துக்கக் குறி காட்டுகின்றனர். அவர்களுக்கு எக்காலத்தும் சந்தோஷமே கிடையாது என்பது அவர்களுடைய அபிப்பிராயம். சிலருக்கு முக ராசியுண்டு. அந்தராசி யில்லாதவர்கள் கூடத் தினம் பத்துநிமிஷம் சிரித்துக் களிப்படைந்திருக்கப் பழகிவருவார்களேயாகில் அவர் மூளைக்குச் சுறுசுறுப்பு ஏற்பட்டு நாளடைவில் முகத்தில் களை தானாக உண்டாகிவிடும். அமெரிக்கா, பாரிஸ், வியன்னா முதலிய இடங்களில் உள்ள மூளை நிபுணர்கள் பரீக்ஷித்துப் பார்த்ததில் சதாகாலமும் சிடுசிடுப்பாக இருப்பவனுடைய மூளை கெட்டுப்போய் மனுஷத்துவேஷியாகிவிடுகிறான் என்றும் சிரிப்பவன் சந்தோஷமாக இருக்கின்றான் என்றும் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

* * *

**மலை நகர்கிறது:**–பிரான்சு தேசத்தில் டெடோன்ஸ் என்ற சிறிய நகருக்கருகேயுள்ள எண்டின்சன் என்ற மலை பெரு மழை காரணமாக நகரை நோக்கி 250 கஜ தூரம் நகர்ந்து வந்திருக்கின்றதாம். நகரத்து மக்கள் அச்சத்தால் ஊரைவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

பிரபல ரசாயன சாஸ்திர நிபுணர் ஒருவர், அடர்த்தியான தலைமயிர் உடைய ஒருவரை விட, வழுக்கை மண்டை யுடையவருக்குமூளை அதிகமென்று முடிவு செய்திருக்கின்றார். ஏனெனில் தலைமயிரின் வளர்ச்சிக்காக அம்மனிதனது ஊக்கத்தில் பெரும் பாகம் செலவிடப் படுகின்றதென்று அவர் கருதுகின்றார்.

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta**

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**
**அமிர்தசாகரம் போன்றவை.**

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

**இனம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனம்!**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)